# பாதுகாவலன்

PATHUKAVALAN


| | |
|---|---|
| பேசாலைப் பங்கு | 200 |
| மாதகல் | 165 |
| நாவாந்துறை | 150 |
| அனைக்கோட்டை | 135 |
| செக்கடித் தெரு | 120 |
| யா/புனிதயுவானியார் | 115 |
| யாழ். O. L. R. | 113 |
| புதுக்குடியிருப்பு | 112 |
| நாரந்தனை | 106 |
| கிளிநொச்சி | 100 |
| இரணைதீவு பங்கு | 100 |
| உரும்பிராய் | 95 |
| ஊர்காவற்துறை | 84 |
| மிருசுவில் | 80 |
| அரிப்பு பங்கு | 78 |
| முருகலைப் பங்கு | 70 |


மலர்: 115 இதழ் : 36  29-9-1989 (செப். 29—ஒக். 6)  ரூபா 1-50— இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



University of Jaffna ... RECEIVED 1989-10-17 Periodicals Library


### பாடசாலை அதிபராகப் பணிபுரிய இருபத்தைந்தாண்டு ஆசிரிய அனுபவம்

### கோருவது குருக்கள் கன்னியர் கல்லூரி அதிபர்களாக பணிபுரிவதைத் தடுக்கும் தீவிரமுயற்சி! ஆயர்கள் கண்டனம்:

# பாடசாலை சட்டத்துக்கு எதிராக கேரள ஆயர்கள் போர்க்கொடி

**கேரள கத்தோலிக்க ஆயர்மன்றத்தின் கல்வி ஆணைக்குழுத் தலைவரும் சங்கனாச்சேரி பேராயருமான பேரருள்திரு யோசப் போலந்தில் கேரள மாக்சிய கம்யூனிச அரசின் இம்முயற்சி இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது என வர்ணித்து கேரள மாநில ரீதியாக இந்நடைமுறைக்கு எதிராகப் போராடவேண்டும் எனக் கேட்டுள்ளார்.**

இந்திய தென் மாநிலமான கேரளாவின் 21 மறைவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒன்றுகூடி கத்தோலிக்க கல்லூரிகளைக் கட்டுப்படுத்த முயலும் கேரள மாக்சிச கொம்யூனிச அரசின் முயற்சிகளைக் கண்டித்து அதனை எதிர்ப்பதற்கு வழிகளைத் தேடியுள்ளனர்.

இம்மாதம் 2 ஆம் திகதி மூவாயிரம் பிரதிநிதிகள் கூடி தாம் இந்த அடக்குமுறைக்கு எதிராகப் போராட எத்தியாகத்தையும் புரியத்தயாராக உள்ளதாக அறிவித்தனர்.

கேரள மாக்சிச அரசுக்கும் கல்லூரி அதிபர்களுக்கும் 1957 இல் முதல் கம்யூனிச அரசு உருவான காலத்திலிருந்தே பல பிரச்சினைகள் இருந்துவந்துள்ளன. 1987 இல் மாக்சிச அரசு ஆட்சிக்குவந்த பிறகு 1988 இல் கேரள கல்விச்சட்டத்தில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

கல்லூரி முகாமையாளர்களாக பணியாற்றிய கத்தோலிக்க நிறுவனத்துக்கும் கேரள கொம்யூனிச அரசுக்கும் இடையில் விரிசல்கள் அதிகரித்தன. இவ்வாண்டுத் தொடக்கத்தில் ஆசிரியர் பயிற்சிச்சாலையில் கத்தோலிக்ககல்லூரி முகாமையாளருக்கு 20 வீதம் மட்டுமே அனுமதிகள் வழங்கப்பட்டன.

கல்லூரிகளில் பணிபுரியும் குருக்கள், கன்னியரை புறக்கணிக்கும் நோக்குடனும் அதிபர்களை மாற்றும் நோக்குடனும் அதிபர் நியமனங்களுக்கு 25 ஆண்டு ஆசிரியர்களாகப் பணியாற்றிய அனுபவம் கோரப்படுகின்றது.

## ஹைதராபாத் பேராயர் குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார்

ஹைதராபாத் பேராயர் சாமினிஸி அருளப்பர், திருச்சபைக்குச் சொந்தமான நிலத்தை ஒரு கட்டிடக் கம்பனிக்கு குத்தகைக்கு விட்டாரென்ற குற்றச் சாட்டை மறுத்துள்ளார்.

ஆகஸ்ட் 22-ம் திகதி ஆயர் பேரவையின் துணைச் செயலாளரான பிதா லூசியோடா வேகா குட்டினோவுக்கு பேராயர் அருளப்பா எழுதிய கடிதத்தில் இக்குற்றச்சாட்டுகள் முற்றும் தவறானவை எனக் கூறியுள்ளார்.

பேராயர் 9753.6 சதுர மீற்றர் நிலத்தை குத்தகைக்கு விட்டாரென்ற குற்றச் சாட்டின் பேரில் புனித மரியாள் ஆலய பங்குச்சபை உறுப்பினர் சிலர் ஜூலை 9-ம் திகதி உண்ணா விரதத்தை மேற் கொண்டனர். இவர்களுக்குத் தலைமை வகித்த ஜோசவ் ரெட்டி பேராயரின் செயலில் பல ஒழுங்கீனங்கள் இருப்பதாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

குத்தகைக்கான ஒரு பத்திரம் பங்குக் குருவினால் திட்டமிட்டு தயாரிக்கப்பட்டதென்றும் பின்னர் அது ரத்துச் செய்யப்பட்டதென்றும் பேராயர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செக்குந்தராபாத் புனித மரியாள் ஆலயம் வரலாற்றுப் பெருமை வாய்ந்தது. 1847 ஆகஸ்ட் 15-ல், அதாவது இந்திய சுதந்திரத்துக்கு 100 ஆண்டுகளுக்கு முன் அதன் அடிக்கல் நாட்டப்பட்டது.

## சீனாவில் ஆடம்பரமான திருச்சடங்கு

தென்மேற்கு சீனாவிலுள்ள சிக்குவான் மாநிலத்தில் இடம்பெற்ற இரு ஆயர்களின் திருநிலைப்படுத்தலே 1958 ஆம் ஆண்டிற்குப்பின் அங்கு நடந்த மிகச் சிறப்பான நிகழ்ச்சியாகும் என்று அங்குள்ள குருவானவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வான்சியாங் ஆயர் மத்தியாஸ் டுவான் யிமிங் என்பவரால், வான்சியாங் துணை ஆயர் ஜோசவ் சூ சிக்சுவான், நான்சொங் ஆயர் மைக்கல் ஹபவாங் வோஸ் என்போர் திருநிலைப்படுத்தப்பட்டனர். இத்திருச்சடங்கிற்கு ஏறக்குறைய 1500 பேர் சமூகமளித்திருந்தனர். 32 குருக்கள் இவ் வைபவத்திற் கலந்துகொண்டனர்.

ஆயர் டுவான் பாப்பு பன்னிரண்டாம் பத்திநாதரால் நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து வசதிகளின்மையால் வான்சியாங், நான்சொங் மாநிலங்களிலிருந்து அநேக மக்கள் சமூகமளிக்கவில்லை. சீன தேசாபிமான கத்தோலிக்கர் சங்கம் இந்நிகழ்ச்சியை வீடியோ படம் எடுத்தது. செங்கு தொலைக்காட்சி தனது மாலைச்செய்தியில் இரு நிமிடங்கள் இந்நிகழ்ச்சியை ஒளி பரப்பியது.

## பத்திரிகைச் சுதந்திரம் மனித சுதந்திரத்தை உறுதிப்படுத்தும்

ஹொங்கொங்கில் ஆகஸ்ட் 3-ம் திகதி நடைபெற்ற நீதி-சமாதான பரிசளிப்பு வைபவத்தில் பேசிய ஹொங்கொங் ஒலிபரப்பு நிலையத்தின் தலைவரான சேர் றொஜர் லொபோ "பத்திரிகைச் சுதந்திரம் மனித சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதால் அது பாதுகாக்கப்படவேண்டும்," எனக் குறிப்பிட்டார்.

அண்மையில் சீனாவில் நிகழ்ந்த கிளர்ச்சிகளை பொறுப்புடன் வெளியிட்ட பத்திரிகை எழுத்தாளர்களை அவர் பாராட்டினார்.

இப்பரிசளிப்பு விழாவை கத்தோலிக்க, புரொட்டஸ்தாந்து சமூக தொடர்பு நிலையங்கள் இணைந்து நடத்தின. ஹொங்கொங் மறைமாவட்ட நீதி-சமாதான ஆணைக்குழுவும் ஹொங்கொங் பத்திரிகையாளர் சங்கமும் போட்டியை ஒழுங்கு செய்வதில் துணைபுரிந்தன.

1988-ல் ஆரம்பிக்கப்பட்ட இப்பரிசுத்திட்டம் தொடர்புசாதனப்பணியில் உள்ளவர்கள் நீதி-சமாதானத்துக்காகக் உழைக்கவும் சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அநீதிகளை வெளிப்படுத்தவும் ஊக்குகின்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான லாம் மோசான் என்பவரும், வர்த்தக வானொலி நிருபரான சூயி சியூவா என்பவரும் 1989-ம் ஆண்டிற்கான பரிசைப் பெற்றுள்ளனர். அச்சக சாதனத்தில் போதிய போட்டியாளர் இன்மையால் அத்துறையில் பரிசு அளிக்கப்படவில்லை.

## திருத்தந்தையின் வருகையின் போது வட சுமாத்திரா முறையில் திருவழிபாடு

திருத்தந்தை அக்டோபரில் இந்தோநேஷியாவுக்கு வருகை தரும் பொழுது வட சுமாத்திரா முறையையொட்டி திருச்சடங்குகளை நிறைவேற்றுவது பற்றி வத்திக்கானின் கருத்தை அறிந்துகொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கிறது'

திருத்தந்தை ஒப்புக்கொடுக்கப்போகும் திருப்பலியில் இலட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றுவர். 135 நிமிடம் எடுக்கும் இத் திருப்பலியில் அவர் 100 பேருக்குத் தம்கையால் நற்கருணை வழங்குவார் இப்பலி குதிரைப்பந்தயத் திடலொன்றில் இடம்பெறும்.


(தொடர்ச்சி 8-ம் பக்கம்)


**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

# ஒக்ரோபர் மாதம்

இது செபமாலே அன்னையின் மாதம். ஒக்ரோபர் புரட்சி வெடித்த மாதம். எமது அண்மைக்கால வரலாற்றில் உறவு விரிசலே ஏற்படுத்திய மாதம்.

இந்திய அரசை நம்பி அயுதங்களைக் கீழே போடுகிறோம் என்ற விடுதலைப்புலிகளும், அமைதி காக்க வந்த இந்திய அமைதிப்படையும் மோதிக்கொண்ட மாதம்.

செபமாலே அன்னை, தியாகத்தின் தாய், இம் மாதம் முழுவதும் நம் கத்தோலிக்க குடும்பங்களிலே ஓதப்படுகின்ற திருச்செபமாலேயின் வல்லமையால் இடுக்கண்ணுற்றுத் தவிக்கும் எம் மக்களின் இடர்களை அகற்றவுள்ளாள் என்ற உறுதியுடன் இம் மாதம் முழுவதும் குடும்ப செபமாலேயில கரிசனையுடன் ஈடுபடுவோம்.

ஒன்றுகச் செபிக்கும் குடும்பம் ஒன்றுக வாழும். போர்நீங்க, அமைதி பிறக்க, செபமாலேயை ஓதுங்கள் என நம்மைப் பணிக்கும் நம் அன்னை, நிச்சயம் அந்த அமைதிக்கு வழிவகுப்பாள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்குப் பின் ஏற்பட்ட திடீர் அமைதி ஒக்ரோபர் தாக்குதலின் காரணமாக சீர்குலேந்தது. ஆயுதங்களைக் களையமுற்பட்ட அமைதிப்படையின் நடவடிக்கை அமைதியைக் கெடுத்தது.

இரண்டு ஆண்டுகள் முயன்றும் ஏற்பட்ட பலன் தான் என்ன என்று உற்றுநோக்கும் வேளையில், அகதிகளாக ஓடிச் செல்பவர்கள் நிர்க்கதி தொடருகின்றது. உறவினர்களை, நண்பர்களை, உடைமைகளை இழப்பவர்கள் எண்ணிக்கையும் பெருகுகின்றது.

இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் புதிதாக ஏதாவது அமைதிக்கு வழி கோலுமா என்ற எதிர்பார்ப்போடு வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

செப்ரெம்பர் 18 திங்கள் இலங்கை — இந்திய அரசுகளுக்கிடையில் நிகழ்ந்த உடன்பாட்டினுல் வடக்கு-கிழக்கில் அமைதிப்படைக்கும் விடுதலேப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டது. 20ஆம் திகதி புதன்கிழமை விடுதலேப்புலிகளும் யுத்தநிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்து ஒரு அறிக்கையை வெளியிட்டனர்.

1987இல் நடைபெற்ற இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின்போது. பிரச்சினைக்குரியவர்கள் கைச்சாத்திடாது இரு அரசுகளே கைச்சாத்திட்டதுபோல இப்போதும் நடைபெற்றுள்ளதை அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டத் தவறவில்லே.

ஆனல் ஒரு மாற்றம். அன்று புலிகளை வழிக்குக் கொண்டுவருமாறு இந்திய அரசிடம் இலங்கை ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனு கோரினுர்; இன்று புலிகளை வழிக்குக் கொண்டுவருமாறு இலங்கை ஜனுதிபதி பிரேமாவிடம் இந்திய அரசு கோருகிறது. கனவிலும் நினைத்திருக்கமுடியாத வரலாற்று மாற்றம் இந்த இரண்டு ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளது.

அண்மைக்காலத்தில் பல புதிய பிரச்சினைகள் தோன்றி நமது மக்களையும், குடும்பங்களையும் சிதறடித்துள்ளதை யார்தான் மறுக்கமுடியும். இவை பற்றுக் குரல் கொடுக்கக்கூட உரிமையற்ற நிலேயிலே வாழுகின்ற பரிதாபநிலே மாற செபமாலே அன்னையே துணைபுரியவேண்டும்.

ஒன்றுக வாழ, ஒன்றுகச் செபிக்க செபமாலேயே சிறந்த கருவி என்பதை இம்மாதம் எமது கத்தோலிக்க குடும்பங்கள் அனைத்தும் உணர்நதுகொள்ளச் செய்யவேண்டும்.

மாலேவேளையில் தெருவில் சென்றுல் வீடெல்லாம் யேசுநாமம் ஒலிக்க, செபமாலே ஓதும் சத்தம் கேட்க ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பமும் முயலவேண்டும். பக்திச் சபைகள் மூலம் பங்குரீதியாக இதனை ஊக்குவித்து குடும்ப ஒற்றுமையையும், சிதறடிக்கப்படாத வாழ்வையும் கண்டுகொள்ள முயல்வோம்.

## தேனருவி

### ஆண்டின் 26—ம் ஞாயிறு (1-10-89)

### சுடலே ஞானம்

போதை வஸ்துக்களுக்கு தற்காலத்து மனிதர் சிலர் அடிமையாகி விடுகிறுர்கள். அதனது பயங்கரமான விளைவையும், தீமையையும் நன்கு அறிந்தவர் கூட அதன் பிடியில் சிக்கி விடுகிறுர்கள். இதற்குக் காரணம் என்னவென்றுல்; போதை வஸ்து—மனித மதியை மங்கப் பண்ணி, அதை அருந்துபவரை 'சொர்க்க உலகத்தில்' நடமாட வைக்கிறதாம். அவ்வுலகத்தில் அவர்தான் பேரரசர் போலக் கற்பனை பண்ணுவாரரம் என ஆராய்ச்சியாளர் கருதுவர்.

செல்வமும், செல்வாக்கும் ஒரு விதத்தில் போதை போன்றவைதான் பணமும், பொருளும், செல்வாக்கும் இன்பமும் அதிகரித்து விட்டால் சிலர் போதை கொண்டவர் போலவே நடந்து கொள்வர். அவர்களது நோக்குகள் மங்கிப் போகின்றன. ஆண்டவன், அயலவர், மனித நேயங்கள், மறுவாழ்வு போன்ற பேருண்மைகளைக் கூட மறந்த நிலேயில், தன்னை விடப் பெரியவன் வேறுயார் உண்டு என்றவொரு செருக்கு அவர்களது தலேயை ஒரு சாண் உயர்த்தி விடுகிறது.

ஆமோஸ் இறைவாக்கினர் ஒரு சாதாரண மந்தை மேய்ப்பவர். ஆனல் இறை அருளால் சமூக நீதியில் தேற்றிக் கண் போன்று தீமையைச் சுட்டெரிப்பார். அவர் சிற்றின்ப வாழ்வில் போதை கொண்ட பெருங்குடி மக்களை முனைந்து சாடுகிறுர். பஞ்சணையில் சாய்ந்து, கொழுத்த கன்றுகளை உண்டு, திராட்சை இரசத்தைக் குடித்து, உயர்ந்த நறுமணம் தடவி, வீணை ஒலியில் மயங்கி, சிற்றின்பத்தில் திளைத்த பணம் படைத்தோரைக் கடுமையாகக் கண்டிக்கிறுர். அவர்கள் பணமும், செல்வாக்கும் உடையவர் என்பதனுலல்ல; அவர்களை ஆண்டவனிடமிருந்தும், ஏழைகளிடமிருந்தும் பிரித்து உறவில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தி விட்டது என்பதே அவரது கண்டிப்பு.

இயேசு கூறும் பணக்காரன்-ஏழை இலாசர் என்னும் கதையில் பணக்காரன் தணியாத வேதனையினுல் தண்டிக்கப்படுகிறுன். அவனிடமிருந்த பணம் அதற்குக் காரணமல்ல மாறுக, அவனது செல்வச் செருக்கும், ஆடம்பர வாழ்வும் ஏழை இலாசரை ஏறெடுத்தும் பார்க்க விடவில்லே என்பதே. ஏழை உருவில் அவனிடம் வந்த ஆண்டவனைப் புறக்கணித்து விட்டான். அந்தப்பணக்காரன் தன் போதையில் ஆண்டவனுக்கு வெகு தொலேவில் இருந்ததை அவனது மறுவாழ்விற்றான் உணர்ந்தான். ஆனல் அப்போது காலம் கடந்து விட்டது.

உண்மையில் எம்மிடமுள்ள பணமும், அதிகாரமும் எம்மை மதி கெட்டவராக, மயக்க நிலேக்குத் தள்ளி விடக் கூடாது. வல்லமை உண்டு என்பதனுல் திமிர் பிடிக்கக் கூடாது அல்லவா? பணக்காரன் தன் வாசல் படியில் இருந்த ஏழைக்குத் தீமை செய்தான் என்றே அநீத வழியில் தன் செல்வத்தை அபகரித்தான் என்றே இல்லே. ஆனல் அவன் நன்மை செய்யத் துணியவில்லே என்பது தான் அவனுக்கு எதிரான குற்றச்சாட்டு.

ஆசைகள், மோகங்கள், போதைகள், துவேஷங்கள் போன்ற மயக்க வில்லேகளைத் தவிர்த்து, முடிவில்லாத வாழ்வு என்ற விழிப்பு மாத்திரை எம்மை ஆண்டவனுக்கும், அயலவருக்கும் அருகே இட்டுச் செல்லும். இறை வார்த்தையின் குரலும், வாழ்வின் இறுதியில் காத்திருக்கும் தீர்ப்பும், எமது தற்கால போதையில் இருந்து விடுதலேபெற உதவவில்லே என்றுல் எமது போதையின் தாக்கம் முடியும் காலத்தில் பிறக்கும் ஞானம் வெறும் சுடலே ஞானமே. தணியாத வேதனைக்கு தப்பிக் கொள்ள முடியாது.

சுவாமி. ஜீவா போல் அ.ம.தி.

ஆமோஸ் 5:1-7 சிற்றின்பம் தேடும் கூட்டம் அற்றுப் போகும்
திமோ. 6:11-16 முடிவில்லா வாழ்வைக் கைப்பற்றிக் கொள்.
லூக் 16:19-31 ஆறுதலோ : வேதனையோ.

## கலைநிலா

### நாட்டார் பாடல்கள்

(சென்ற இதழ் தொடர்)

எனவே ஒரு சமூகத்தில் பெண்ணுனவள் தன் கணவனுடனும், குழந்தைகளுடனும் வாழ்வது தான் அவளுக்கும் பெருமை இதை அவர்கள் பாக்கியமாக கருதுகிறுர்கள்.

மாலே விளக்கெரிய
மணவாளன் சோறுதின்னப்
பாலன் விளேயாட ஒரு
பாக்கியம் தா ஆண்டவனே

இவ்வாறுன இனிய ஏராளமான பாடல்கள் அழிந்து போவது எத்துனே இழப்பு. சில கடற்கரை பகுதி மீனவர்களால் பாடப்படும் அம்பாக்கள் எல்லாம் அழிந்துபோகின்றன, இவற்றை சேகரித்து பாதுகாக்கவேண்டியது நம் ஒவ்வருவரது கடமையாகும்.

இந்நாட்டார் பாடலே படிக்கும் ஒவ்வருவரும் உங்கள் பகுதிகளிலுள்ள அம்பா, தாலாட்டு, அருவி வெட்டுதல், நெல் விடித்தல், வசைபாடல், ஒப்பாரி ஆகியவற்றை சேகரித்து,

திருமறைக் கலாமன்றம்
வெளியீட்டுப் பகுதி,
223, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தால் அவை தொகுத்து பேணப்படுவதுடன் அச்சேறவும் உதவியாக இருக்கும். —சுதன்

* * *

### திருப்பலியும் ஒன்றியமும்

கடந்த 14-09-89 வியாழக்கிழமை மு. ப. 10. 30 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தின் ஒன்றியமும் திருப்பலியும் நடைபெற்றது. திருப்பலி அருள்திரு. ஸ்ரீபன் அடிகளாரால் ஆச்சிரமத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின் மறைக்கல்வி நிலேய மண்டபத்தில் திரு. அ. அன்டர்சன் தலேமைப்பணியை ஏற்று தலேமையுரை வழங்கி ஒன்றிய நிகழ்ச்சிகளை நடாத்திஞர்.

இசைத்தென்றல் ம. யேசுதாசன், ஆசிரியர் அருள் பிலிப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அடுத்து ஒன்றியத்தில் கலந்துகொண்ட புதிய கலேஞர்கள் தம்மை அறிமுகம் செய்துவைத்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் மன்ற பொதுச்செயலாளர் திரு. V. J. கொன்சன்ரைன் அவர்கள் நன்றியுரை வழங்கினுர்.

தகவல்:- C. M. N.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### 3. எல்லைகளுக்குள்ளே...

அம்பலத்தில் ஆடவேண்டுமானால்
அறையிலும் ஆடவேண்டும்.
பிள்ளைகளின் பின் தானே நாய்களுக்கு உணவு?
"புறவினத்தாரிடையே செல்லவேண்டாம்.
சிதறிப்போன,
இஸ்ராயேல் ஆடுகளிடமே செல்லுங்கள்"
'கரு' வாயிருக்கையில் இயேசு சொன்ன இவ்வார்த்தைகள்
'உரு'வான பின்பும் சீடர்களின் சிந்தைகளில் நின்றன.
பெந்தகோஸ்து போதனையில் மனந்திரும்பினர்
மூவாயிரம் யூதர்கள்.
ஆலயத்தின் அழகுவாயிலில்
பிறவி முடவன் பெற்ற பிச்சையைத் தொடர்ந்து
மனம்மாறிய ஐயாயிரம் பேரும் கூட யூதர்கள்தான்.
பல இடங்களிலிருந்தும்
திருவிழாவிற்கு வந்திருந்த அவர்கள் எவரும்
நாடு திரும்பவில்லை.
யெருசலேமிலேயே கூடியிருந்தனர்,
உண்மைக் கிறிஸ்தவ வாழ்வு நடத்தினர்.
அப்போஸ்தலரின் படிப்பினையைக் கேட்பதிலும்
நட்புடன் உறவாடுவதிலும்,
அப்பம் பிட்குதலிலும்,
செபிப்பதலும் நிலையாயிருந்தனர்.
தங்கள் உடைமைகள் அனைத்தையும்
பொதுப் பொருளாய்க் கொண்டனர்.
ஒரு மனத்தோராய்.
நாள்தோறும் தவறாமல் கோயிலில் கூடுவர்.
மனமகிழ்வோடும்
கபடற்ற உள்ளத்தோடும்
அப்பத்தைப் பிட்டுப் பகிர்ந்து கொள்வர்.
இப்படியாக,
மழைக்காளான் போல விசுவாசிகள் பெருகினர்.
திருச்சபை வளர்ந்தது.
ஆட்கள் பெருகப், பெருக
நிர்வாகத்திலும் பிரச்சினை வந்தது,
பகிர்தல் விடயத்தில் பல குழறுபடிகள்
"போதனை விடுதல் உயிர்விடுதல்"
எண்ணிய சீடர்கள்
திருத்தொண்டராக எழுவரைத் தெரிந்தனர்.
பகிர்வதிலும் பந்தி பார்ப்பதிலும், போதிப்பதிலும்
அவர்கள் ஈடுபட்டனர்.
இப்படியாகப் பிரச்சினை தீர்ந்தது.
விசுவாசிகளுக்குள் ஒற்றுமை வளர்ந்தது.
ஆனால்,
கடுகுவிதை காடரவதை,
முழுமாவும் புளியாவதை
தலைமைக்குழுக்களால் சகிக்க முடியவில்லை.
பரிசேயர்களும் பதறிப்போயினர்.
சதுசேயர்கள் கூடி சதியில் இறங்கினர்.
விளைவு...
அப்போஸ்தலர்கள் கைதாயினர்,
இராயப்பரும், அருளப்பரும்
எச்சரிக்கப்பட்டு விடுதலையாயினர்.
சிலநாட்பின்னர்......
மீண்டும் ஒருமுறை சிங்கங்கள் சிறைப்பட்டன.
நள்ளிரவில்,
ஆண்டவர் கரத்தால் சிறைச்சாலை சிதறியது.
அப்போஸ்தலர் வெளியேறி ஆற்றலுடன் போதித்தனர்.
மீண்டும் கைது
மீண்டும் விசாரணை,
மீண்டும் இராயப்பரின் வீரவார்த்தைகள்.
கமாலியேல்,
சங்கத்துள் கற்றவர்.
யூதர்களிடையே புகழ்செறிந்த ஆசிரியர்
சபையில் அவர் சொன்னார்;
"வேண்டாம் இம்மோதல்
மனிதரது வேலையானால் இது மண்ணில் மறைந்து விடும்.
இறையவனின் வேலையானால்
நீர் இறைவனுடன் மோதுகின்றீர்"
"சரியான யோசனைதான்"
சங்கமும் சிறிது சிந்தித்தது.
விளைவு......
கசையடியும், விடுதலையும்
சீடரிடத்தில்
யேசுவுக்காய் துன்புற்றோம் என்ற மகிழ்ச்சியும்.
ஆனால்,
விதிவிடவில்லை,
சங்கம் சர்வேசுரனோடு மோதக் கங்கணங் கட்டியது.
கடுகு விதையைக் கண்டுபிடிப்பேன் என்றது.
பிசைந்த மாவிலிருந்து
புளிக்காரத்தைப் பிடுங்குவேன் என்றது.
விளைவாய் நிகழ்ந்தது...
புளிக்காரத்தின் பூகம்பம்.
கடுகுக் காட்டில் ஒரு திடீர் அபிவிருத்தி.
யூத எல்லையும் இல்லையென்றானது.

— சந்திரன்

# பங்குத்தளங்களில்....

## இராமநாதபுரத்தில்

இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஆவணித்திங்கள் இருபத்தேழாம் நாள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஆவணித்திங்கள் 20-ம் திகதியன்று காலை 7-30 மணியளவில் பங்குத்தந்தை அருட் திரு. அன்ரனி அடிகளார் அவர்களினால் கொடி ஏற்றப்பட்டு பின்னர் திருப்பலியுடன் ஆரம்பமானது. 27-ந் திகதி வரை நவ நாட்கள் இடம் பெற்றன. வழிபாடுகள் முதல் நாள்; இறை வார்த்தை, பெற்றோர் தினம், இளைஞர் தினம், சிறுவர் தினம், நோயாளர் தினம், ஒப்பரவு, நற்கருணை என்ற வகையில் இடம் பெற்றன. வழிபாடுகளை அந்தந்த நாளுக்குரியவர்கள் விசேஷித்த விதமாக சிறப்பித்தார்கள்.

நோயாளர் தினத்திலே கிளிநொச்சி பங்குத்தந்தை அருட் திரு. இருதயதாஸ் அடிகளார் அவர்களினால் விசேட வழிபாடு இடம் பெற்று மத வேறுபாடின்றி நோயாளர் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

ஒப்புரவு தினத்திலே பங்குத்தந்தை அருட்திரு. அன்ரனி அவர்களாலும் அருட் சகோ. யோட்ச் அவர்களாலும் பாவசங்கீர்த்தனம்பற்றிய தர்க்கப் பிரசங்கம் இடம் பெற்றது. அந்த உரையாடலிலே மக்கள் பாவசங்கீர்த்தனம் மட்டில் கொண்டிருந்த தப்பான பல அபிப்பிராயங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

நற்கருணை தினத்திலே முதல்நன்மையும் வழங்கப்பட்டது. அன்றைய வழிபாட்டை மறைக்கல்வி இயக்குனரும் நேசத்தந்தையுமான அருட் திரு. நேசநாயகம் அடிகளார் கலந்து கொண்டு சிறப்பித்தார். திருநாட்திருப்பலியை அருட் திரு. நேசநாயகம் அடிகளாரும் பங்குத்தந்தை அன்ரனி அடிகளாரும் நிறைவேற்றினர்

திருநாட்காலங்களில் மறை உரை ஆற்றிய பங்குத்தந்தை அவர்கள், அருட்திரு இருதயதாஸ் அடிகளார், அருட்திரு. நேசநாயகம் அடிகளார் அவர்கள் யாவரும் மக்கள் மனதில் எளிதில் புரியக்கூடிய விதத்தில் மறை உரை வழங்கினர்.

பங்குத்தந்தை அவர்கள் இறைபணி தொடங்கி முழுமையாகமூன்று மாதமாகாத நிலையிலும், அவரது முதல்பங்கின் முதல் திருவிழாவாக இருந்த எமது பங்கின் திருவிழாவை மக்கள் யாவரும் வியந்து போற்றக்கூடிய வகையிலே, மிகவும் கோலாகலமாக நடந்த இந்தத் திருவிழாவின் சிறப்பை, பங்குமக்கள் மட்டுமன்றி திருவிழாவுக்கு ஒத்துழைப்பு நல்கிய இந்து சமய சகோதரர்களும் பாராட்டிப் பேசுவதைக் கேட்கக்கூடியதாய் இருந்தது.

இருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுருப பவனி வீதிகள் அலங்கரிக்கப்பட்டு, உருக்கமான மன்றாட்டுக்களுடனும், திருச்சுருப ஆசீருடனும் விழா இனிதே நிறைவுற்றது.

தகவல்:- யஸ்மின் மத்தியூஸ்
(மறை ஆசிரியர்)

★

## நெடுந்தீவில்

கடந்த 2.7.89 நெடுந்தீவின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க வோர் பொன்னாள். அது ஆரோக்கிய அன்னை கோவில் கொண்டருளிய நன்னாள். தூய உள்ளங்களினூடாகவே அன்னை தன்னை உலகிற்கு வெளிபபடுத்திக் கோவில் கொண்டுள்ள வரலாறுகளை நாம் அறிந்திருக்கிறோம்.

இந்துமதத்தைச் சார்ந்தவரும் இளமைத்துடிப்பும், அயராத சேவை மனப்பாங்கும் கொண்ட வைத்திய அதிகாரியை மையக்கருவாக்கிப் பலரது முயற்சியைக் கைகூட வைத்து இவ்வாலயத்தை வைத்தியசாலை வளவிற்குள்ளேயே அமைத்தமை நெடுந்தீவு மக்களுக்குக் குறிப்பாகக் கத்தோலிக்க மக்களுக்கு வியப்பையும் நன்றியுணர்வையும் தரும் அனுபவம் ஒன்றெனலாம்.

அன்று மாலை மகாவித்தியாலயக் கெபியிலிருந்து அன்னை வேளாங்கண்ணி சுருபம் செபமாலைப் பவனியுடன் சென்றது. வைத்தியசாலை வளவில் வைபவங்களுடன் வரவேற்கப்பட்ட அன்னை சொரூபம் சிற்றாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

பின் யாழ். மறைவட்டக் குரு முதல்வர் அருள்திரு. S. A. மைக்கல்சாமி அவர்களால் மந்திரிக்கப்பட்டுத் தேவாலயத்தில் கூட்டுப்பலியைப் பங்குத்தந்தை அருள்திரு. லம்பேட், கிருபானந்தன் அடிகளார் அவர்களும் நிறைவேற்றினர்.

எம். ரி. பசுபதி.

★

## சில்லாலைப்பங்கில்

ஆவணித் திங்கள் 6-ம் நாள் சில்லையூரின் பாதுகாவலி கதிரைச் செல்வியின் திருவிழா ஆரம்பமாகியது.

இறைவார்த்தையில் வாழ்வு, விசுவாசத்தின் இதயத்துடிப்பு செபம், சிறுவர்களின் நலன்களைப் பேணுவோம், இளமைத் துடிப்பு மாபெரும் சக்தி, கொடுக்கத்தான் கொண்டிருக்கிறோம் கெடுக்கவல்ல, ஆண்களின் அதிகாரத்திலும் பெண்களின் அன்பே மேலானது. தாய்மையைப் போற்றுவோம், உழைப்பின் மகிமை, கிறிஸ்துவில் வாழ்வோம் பற்றிய கருத்துக்கள் மறையுரைகளின் போது குறிப்பாக சிறுவர், இளைஞர், பொதுநிலையினர், பெற்றோர், என்ற மட்டில் ஆழமாக எடுத்துரைக்கப்பட்டு சிந்தனைக்கு விடப்பட்டது.

நற்கருணைத் தினத்தில் அருள்திரு. லூயிஸ் பொன்னையா அவர்களால் "எமது வாழ்வு எப்படிப்பட்டது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு நாம் எப்படிச் செயற்படுகின்றோம்?

எமது வழிபாடும் வாழ்க்கையும் பின்னிப்பிணைந்ததாக இருக்கவேண்டும்" எனத் தெளிவாக விளக்கப்பட்டது. 15 ஆம் திகதி அன்னையின் திருநாளன்று காலை 7 மணிக்கு கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மறையுரையின் போது "அம்மா என்றும் சும்மா இருப்பாளா? அன்னையின் வழியில் நாம் சென்றால் அவள் எம்மைக் காப்பாள். மரி பெயர் சொன்னால் மனபயக்கம் எமக்கில்லை. என அருள்திரு. லம்பேட் அடிகளாரால் கூறப்பட்டது. பக்தர்கள் பக்திப்பரவசத்துடன் அன்னையின் திருச்சுருபப்பவனியில் கலந்துகொண்டனர். ஈற்றில் அன்னையின் பிரியாவிடைச்செபம் பங்குத்தந்தையால் நெஞ்சுருகச் செபிக்கப்பட்டு அன்னையின் ஆசீருடன் விழா இனிதே நிறைவுற்றது.

மேரி ஞானமலர் சாமிநாதர்.
சில்லாலை.

★

## பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்புப் பங்கைச் சேர்ந்த இளம் யுவதிகளுக்கான கருத்தரங்கு 8-8-89 ம் திகதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு பங்குத்தந்தை அருள் திரு செபமாலை துரம் அ. ம. தி. அடிகளால் பண்டத்தரிப்புதியான இல்லத்தில் ஆரமபமானது. இதில் 32 யுவதிகள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் 'மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வதற்கு நாம் எம்முடனும், அயலவருடனும் இறைவனுடனும் உறவு கொண்டிருத்தல் அவசியம் என்றும் மகிழ்ச்சியான வாழ்விற்கு புன்னகையே பெண்களுக்கு சிறந்த அணிகலன் என்றும் நாம் இறை அன்பிலும் பிறர் அன்பிலும் வளர திருவருட்சாதனங்கள் உதவுகின்றன' என்றும் விளக்கப்பட்டது.

இக்கருத்தரங்கின் மூலம் பங்குபற்றிய யுவதிகள் அனைவரும் நல்ல பயனைப் பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. 12-08-89 அன்று காலைத்திருப்பலியுடன் கருத்தரங்கு இனிதே நிறைவு பெற்றது.

ம. மேரி ஜொய்ஸ் ஜெனிற்ரு
மறையாசிரியர், அளவெட்டி

## புதியதோர் யுகத்தின் பேறுகால வேதனை

அருட்திரு. அதிரியான் யோசப் (அ ம. தி.) எழுதும் புதியதோர் யுகத்தின் பேறுகால வேதனை தொடர்ச்சியை இவ்வாரம் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். தொடர்ச்சியை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

ஆ-ர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எடுத்ததை எடுத்த இடத்தில்

## சிறுகதை

பகலரசன் உலகிற்கு வரதுடித்துக் கொண்டிருந்தான். கழுவிய முகத்தை தன் துவாயினுல் துடைத்துக்கொண்டு மேசையிலே பரந்துகிடக்கும் பேப்பர்கள், புத்தகங்கள் மத்தியில் தன் மூக்குக்கண்ணுடியைத் தேடுகின்றார் அன்ரனிப்பிள்ளை மாஸ்ரர். ''இந்த வீட்டில ஒரு சாமான் வைச்ச இடத்தில இருக்காது. இதில வைச்சது அதில இருக்கும் அதில வைச்சது இதில இருக்கும் சீ... எடுத்ததை எடுத்த இடத்தில வைக்கிற பழக்கமே கிடையாது'' பொரிந்து தள்ளினார் அன்ரனிப்பிள்ளை மாஸ்ரர்.

சமையலறையில் இருந்த மகள் ரேசினி இடியப்ப உரலுடன் வெளியே வந்து அப்பாவை நோட்டம் விடுகின்றாள். மூக்குக் கண்ணுடியைப் போட்டுக்கொண்டு நியூஸ்பேப்பரில் அமிழ்ந்து போயிருப்பது தெரிகிறது. அப்பா கண்ணுடியைக் கண்டெடுத்து விட்டார் என்பதில் ஆறுதல் அடைந்தவளாக மீண்டும் குசினிக்குள் சென்று தன் வேலையில் ஒன்றித்துவிடுகிறாள். ரேசினியின் மகன் வினோத் கண்களைக் கசக்கிக் கொண்டு அப்போதுதான் நித்திரையால் எழுந்து வருகிறான். தூரத்திலே ஷெல் சத்தங்கள் கேட்ட வண்ணமாய் இருந்தன. ''கேட்டியா ரேசினி இண்டையில இருந்து இரண்டு நாளைக்கு ஹர்த்தால். பள்ளிக்கூடம், பஸ் ஓட்டம் ஒண்டுமே இல்லையாம். ''பேப்பரில் இருந்து தன் தலையை உயர்த்தியவராக ஒரு கையினுல் தன் கண்ணுடியை சற்று உயர்த்திக் கொண்டு மாஸ்ரர் கூறினார். ''கேவ்யூ, ஹர்த்தால் எண்டு பிள்ளையளின்ர படிப்புத்தான் பாழாப்போது'' என்றவாறு ரேசினி வினோத்திற்கு முகம் கழுவி துடைத்து விடுகின்றாள். தாயின் பிடியிலிருந்து விடுபட்டவனாக அன்ரனிப்பிள்ளை மாஸ்ரரின் மடியில் ஏறிக் கொள்கிறான் வினோத். தன் பேரனை வாரி அணைத்தவாறு வினோத்தின் தலையை அன்பாக வருடி விடுகின்றார் மாஸ்ரர். 'தகப்பனில்லாப் பிள்ளையாகி விட்டானே'' என அவர் உள்ளம் கூறிக்கொண்டது,

மூன்று வருடங்களுக்கு முன்பு சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு காணுமற்போனவர்களின் பட்டியலில் இணைந்து கொண்டார் ரேசினியின் கணவன் டேவிட். தன் ஓரே பிள்ளையான ரேசினியின் நல்வாழ்வைக் கண்டு மகிழ்ந்திருக்க வேண்டிய அன்ரனிப்பிள்ளை மாஸ்ரர் அவள் கணவன் இழப்பிலே துடித்துப் போனார். தன் வாழ்வே சூனியமாகி விட்டதைப் போன்ற உணர்வுடன் திகைத்து நின்றார். எல்லாம் விதிப்படியே நடக்கும் என ஒருவாறாகத் தன்னையே தேற்றிக்கொண்டு தன் பென்சன் சம்பளத்திலே தன்னுடையதும், தன் மனைவியினதும் வாழ்க்கை வண்டியை நகர்த்தி வந்தார் மாஸ்ரர்

ஒருநாள் ரேசினி, ''அப்பா நான் இப்பிடியே ஒரு வேலையும் இல்லாம இருந்து என்ன செய்ய. பிறின்சிப்பல் ஸ்கூலில வந்து படிப்பிக்க கேட்கிறார். அப்பா......'' நெடுநாளாக கேட்க வேண்டும்,

கேட்க வேண்டும் என்று அங்கலாய்த்துக்கொண்டிருந்ததை இப்போது கேட்டே விட்டாள். ரேசினி அப்பாவின் பதிலுக்காக அவர் முகத்தையே நோக்கிய வண்ணமாய் இருந்தாள். அன்ரனிப்பிள்ளை மாஸ்ரர் எதிர்பார்க்காததைத்தான் ரேசினி கேட்டு விட்டாள்.

என்ன செய்வது! தன் மானம் சமூக அந்தஸ்து எல்லாம் வறுமை அரக்கனோடு போட்டி போட முடியுமா? அவர் கண்கள் குளமாகின. தன்னிலை பெற்றவராகத் துவாயினுல் முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்து முற்றத்துக்கு வந்தார். ''என்னம்மா செய்றது. உன்ர அம்மா கூட தான் வேலைக்குப் போகப் போறன் எண்டு தன்ர வாழ்நாள் முழுக்க என்னோடவாதாடித்தான் பார்த்தா நான் கடைசி மட்டும் அதுக்குச் சம்மதிக்கவே இல்லை. என்னமோ எனக்கு பொம்பிளையள் உத்தியோகம் பார்க்கிறது பிடிக்கிறதில்லை. என்ன செய்ய உன்ர தலைவிதி இப்படியாய் போச்சு'' மாஸ்ரர் கூறிமுடித்த போது வினோத் ரேசினியின் சேலையைப் பிடித்துக்கொண்டு 'அப்ப அம்மாவும் இனி என்னோட ஸ்கூலுக்கு வருவிங்க இல்லையா' எனத் துள்ளினான்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

தமிழ்நேசன்
யாழ்.குருத்துவக் கல்லூரி

✻✻✻✻✻✻✻✻✻✻✻

பாடசாலையில் வகுப்பு நேரத்தைத் தவிர ரேசினி யாரையும் நிமிர்ந்து பார்க்க மாட்டா. இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டன. அவள் முதன் முதல் நிமிர்ந்து பார்த்தது அகிலன் மாஸ்ரரைத்தான் என்னவோ தெரியவில்லை. அகிலன் மாஸ்ரருடன் மனம்விட்டுக் கதைக்கும்போது தன் உள்ளத்தின் பாரங்களை இறக்கிவைப்பதைப் போன்ற உணர்வை ரேசினி பெற்றாள். ஒரு பெண்ணுக்குரிய இயல்பான உணர்ச்சிகள் ரேசினிக்கு மட்டும் என்ன விதிவிலக்கா? அகிலன் மாஸ்ரரின் கலகலப்பான பேச்சிலே அவருடைய உணர்வுபூர்வமான அன்பிலே ரேசினி அமைதியடைந்தாள். அவள் ஒருநாள் பாடசாலைக்கு வராவிட்டாலும் அன்றைய நாள் அகிலன் மாஸ்ரருக்கு ஒரே ''டள்''ளாக இருக்கும். அதே நிலைதான் ரேசினிக்கும்.

வீட்டிலே மகன் வினோத்திற்கு சாப்பாடு போட்டுக் கொடுத்து விட்டு அவன் உண்ணும் அழகையே பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள். ரேசினி வினோத் வழக்கமாகக் கேட்கும் கேள்வியையே இப்போதும் தாயிடம் கேட்கின்றான். ''அம்மா, அப்பா எப்ப அம்மா வருவார்? கெதியா வருவார், கெதியா வருவார் எண்டுதான் சொல்லுறீங்க இன்னும் வரயில்ல''

''இல்ல ஐயா அப்பா இனி வரமாட்டார் போலதான் இருக்கு. எதுக்கும் நல்லா மண்டாடுங்க அப்பதான் கெதியா வருவார்'' ரேசினி ஒவ்வொருமுறையும் அவனைச் சமாளிப்பதற்கு பெரிய கஷ்டப்படுவாள்.

சூரியன் கதிர்களின் வெம்மை குறைந்து கொண்டிருந்தது. அன்ரனிப்பிள்ளை மாஸ்ரர் புத்தகத்தில் ஆழ்ந்து போயிருக்கின்றார். வீட்டின் முற்றத்தில் ஸ்கூட்டர் ஒன்று இரச்சலுடன் வந்து நின்றது. மாஸ்ரர் கண்ணுடியை நீக்கிக் கொண்டு யன்னலூடாகப் பார்க்கின்றார். ஒரு நாளும் காணுத புது முகம். வந்தவர் நேரடியாக வீட்டிற்குள் வந்து முன்கோலில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார். அன்ரனிப்பிள்ளை மாஸ்ரர் கேள்விக் குறியோடு பார்வை அம்புகளை வந்தவர் மேல் விடுகின்றார்.

'நான் ரேசினியோட ஸ்கூலில படிப்பிக்கிறனுன். என்ர பெயர் அகிலன். ரேசினியைக் கண்டு கதைச்சிட்டுப் போகலாமெண்டுதான் வந்தன்' அகிலன் மாஸ்ரர் கூறிமுடித்தார். அன்ரனிப்பிள்ளை மாஸ்ரரின் முகத்தில் கோபக்கனல் தெறித்தது. கண்ணுடியைக் கழற்றி மேசைமேல் வைத்து விட்டு அவசரப்பட்டு எழுந்து கொண்டார். ''இந்தா பாரும் இந்தப் பள்ளிக்கூட உறவுகள் எல்லாம் பள்ளிக் கூடத்தோட இருந்திடனும். வீடு மட்டும் வாறது எனக்குப் பிடிக்காது மாஸ்ரரின் கோபம் அவருடைய வார்த்தைகளில் தெரிந்தது. அகிலன் சற்றும் அதிர்ச்சி அடையாதவராக அன்ரனிப்பிள்ளை மாஸ்ரரை நோக்கி 'உங்கட மகளோட உள்ள உறவு வாழ்நாள் பூராவும் தொடர வேண்டுமெண்டதற்காக உங்கட அனுமதி கேட்கத்தான் இப்ப இஞ்ச வந்திருக்கிறன்'' என்றார். அவருடைய, வார்த்தைகளில் ஆறுதலும், தெளிவும் கலந்திருந்தன.

ரேசினி படுக்கையறையில் நித்திராதேவியின் அணைப்பில் இருந்து விடுபட்டவளாக கண்விழித்த போது நன்கு பழக்கப்பட்ட குரல் அவள் காதுகளில் ஒலித்தது. அக்குரல் அகிலன் மாஸ்ரருடையது என அடையாளம் கண்டுகொள்ள அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அகிலன் இறுதியாகக் கூறிய வார்த்தை அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. எப்போதோ ஒரு நாள் கேட்க வேண்டும் என இருந்ததை அகிலன் இப்போது வந்து அப்பாவிடம் கேட்பார் என்று ரேசினி எதிர்பார்க்கவில்லை.

''இந்தா தம்பி நீர் என்ன கதைக்கிறீர் எண்டத கொஞ்சம் யோசிச்சுக் கதையும்'' அன்ரனிப்பிள்ளைமாஸ்ரர் கூறி முடிப்பதற்குள் ''நான் ஆற அமர இருந்து நல்லா யோசித்துத்தான் வந்திருக்கிறன். இன்டைக்கு ஐஞ்சு வருசத்திற்கு முதல் உங்கட மகள் ரேசினியின்ர புருசன் டேவிட் கைது செய்யப்பட்டதுக்கு காரணமே என்ர அண்ணன் தான். அவர் அறியாமற் காட்டிக்கொடுத்து ரேசினியின்ர தாலியை அழிச்சிற்ருரு. நீங்க அடிக்கடி வீட்டில சொல்லுவீங்களாம் எடுத்தத எடுத்த இடத்தில வைக்கணும் எண்டு. அதனுல தான் என்ர அண்ணன் எடுத்த ரேசினியின் தாலிய நான் அதே இடத்தில வைக்கப்போறன்'' அகிலன் கூறி முடித்தார்.

ரேசினி படுக்கையறையில் இருந்து எழுந்து வந்து 'அப்பா அவர் சொல்லுறதத்தான் நானும் விரும்புறன். என்ர உள்ளத்தில அவர் எப்பவோ இடம் பிடிச்சிற்ருர். இனி உங்கட சம்மதம் ஒண்டுதான் வேணும்'' ரேசினியின் வார்த்தைகளில் ஆவலும், ஏக்கமும் கலந்திருந்தன.

அன்ரனிப்பிள்ளை மாஸ்ரர் துவாயினுல் முகத்தில் இருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார். சுவரிலே மாட்டப்பட்டிருந்த மடு அன்னையின் படத்தை நோக்குகின்றார். சாந்தமே உருவெடுத்த அந்த அன்னை அமைதியான முகத்துடன் மாஸ்ரரைப் பார்க்கின்றாள். அந்தப் பார்வையில் மாஸ்ரர் எதையோ பெற்றுக் கொண்டவர் போன்று ஒரு சிறிய புன்னகையுடன் 'உங்கள் விருப்பம்தான் என்ர விருப்பமும்' என்கின்றார். அந்த நிமிடத்திலேயே அகிலனையும், ரேசினியையும் மணக் கோலத்தில் கண்டு உள்ளூர உவகை அடைகின்றார் மாஸ்ரர்: ரேசினியின் கண்களும் அகிலன் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்து கதை பேசிக் கொண்டன.

ரியூசன் முடிந்து அப்போதுதான் வினோத் வந்துகொண்டிருந்தான். வந்ததும் வராததுமாக அன்ரனிப்பிள்ளை மாஸ்ரரின் மடியில் புரண்டுதவழ்ந்து விட்டு அகிலன் மாஸ்ரரைப் நோக்கிக் கேள்விக்கணை ஒன்றை பார்வை மூலம் செலுத்தி விட்டுத் தாயை நோக்கினான். அவள் எதுவுமே பேசவில்லை. அகிலன் ஒரு தந்தைக்குரிய அன்போடு வினோத்தைவாரி அணைத்துக் கொள்கிறார்.

(யாவும் கற்பனை)

---

## புனிதர் வழியில்

புனித ஏரோணிமுஸ்—
செப்டம்பர் 30 (கி.பி 345-420)

இவர் யூகோஸ்லாவியா எனப்படும் டால்மீச்யாவில் ''ஸ்டிரீடன்'' என்ற ஊரில் தோன்றி அவ்வூரிலே தமது படிப்புக்களைத் தொடங்கினர். பின்னர் உரோமை சென்று பிறகு ஜெர்மனி முதலியநாடுகளுக்குச் சென்று இறுதியாகப் பலஸ்தின நாட்டை அடைந்தார். அங்கு 5 ஆண்டுகள் பாலைவனத்தில்தனிவாசம்செய்தார். இறுதியாகப் பெத்லேகமில்கிறிஸ்துதோன்றிய குகைஎன்று நம்பப்படுகிற இடத்துக்கு வந்து சேர்ந்தார்கி.பி.420 ஆம்ஆண்டு டம்பர் 30இல் இறைவனடி சேர்ந்தார். படிப்பி ॥ நாமும் நமது. தனித்தீர்வை. பொதுத் தீர்வை நாட்களை பயபக்தியோடு சிந்திப்போம்.

புனித தெரசம்மாள்
(குழந்தை யேசுவின்)
அக்டோபர்-1.(கி.பி 1873-1897)

பிரான்ஸ் நாட்டில் அலன்ஸோன்என்ற ஊரில் பக்திமிக்க கத்தோலிக்ககுடும்பத்தில் ஒன்பதாவது பிள்ளையாகத் தோன்றினள். தனது ஆவலைப்பூர்த்தி செய்ய 16ஆவது வயதில் பாப்புவின் தனி அனுமதியுடன் கார்மேல் மடத்தில் சேர்ந்தாள். உலகத்தைத் துறந்து இதில் சேர்ந்த நாள் முதல் புண்ணிய வடிவில் நாளுக்கு நாள் உற்சாகத்துடன் வளர்ந்தாள். குழந்தை உள்ளம், ஆழ்ந்த தாழ்ச்சி பகிப்பொருளாகத் தன்னைக் கருதி அதன் படி நடப்பது, இறையன்பு, இறை நம்பிக்கை, ஆகிய புண்ணியங்களில் தலைசிறந்து விளங்கினள் எலும்புருக்கி நோயினுல் தனது 24வது வயதில் இறைவனடிசேர்ந்தாள். சிந்தனைக்கு! அன்பு என்பது தனிப்பெரும் உலகம், காலம், அகலம் அனைத்தையும் அடக்கியுள்ளது சொல்லப்போனுல் அது நித்தியமானது.

புனித பருனோ அக்டோபர்—6
(கி.பி - 1030 1101)

ஜெர்மனிநாட்டில்கொலோன் நகரத்தில்பிறந்தஇவர்,ஞானங்களைக் கற்றறிந்து குருவாகிப் பிறர் ஆன்ம மீட்புக்காக அயராது உழைத்தார். பின்னர் சிலருடன் கார்த்தூசியன் என்னும் அடர்ந்த காட்டில் ஜெபத்தாலும், கடுந்தபத்தாலும் இறைவனுக்கு ஊழியம் செய்யத் தொடங்கினர். இவரும் இவரின் தோழர்களும் வாழ்நாள் எல்லாம் மௌனம் அனுசரித்தார்கள். ஒரு நாளைக்கு ஒருவேளை மட்டும் உண்பார்கள். அதுவும் சிறிய உணவே உண்டனர். இடைவிடாமல் வேதபுத்தகங்களை படிப்பதிலும், எழுதுவதிலும் நேரத்தைச் செலவிட்டனர். பாப்பரசர் பலரும் இப்புனிதரின் ஆலோசனையை நாடினர். பாப்பரசர் இவருக்கு அளித்த பேராயர் பதவியை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அநேக அரசகுலத்து மக்கள் உலகத்தைத்துறந்து புருனோவின் சீடர்களானார்கள். அநேக ஆண்டுகள் ஊழியம் செய்தபின் வான்வீட்டை அடைந்தார்.

புனித லெயோனர்ட்-
அக்டோபர் 9
(கி.பி 1541-1609)

இத்தாலியில் லுக்கா என்ற இடத்தில் தோன்றி தம் படிப்புக்களை நல்லமுறையில் முடித்த பின் 26ஆவது வயதில் குருவானார். திரிதெந்தின் சங்கம் என்னென்னவிதமான மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் குருக்களிடம் எதிர்பார்த்ததோ அவற்றை பூர்த்திசெய்யும் முறையில் ஒரு துறவற சபையை நிறுவினர் ''விசுவாசப் பரப்புதல் சபைக்கு'' அடித்தளமிட்டவர் இவரே. இவரது சபை இத்தாலி முழுவதும் ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பெரிதும் முயன்றிருக்கிறது. இதன் பொருட்டே ஜான் பாப்டிஸ்ட விவேஸ் என்றபுனிதருவுடன் இணைந்து விசுவாசப் பரப்புதல் குருமடம் ஒன்றும் உரோமையில் நிறுவினர்

-S. S. கருணைதாஸ்
அ. ம. தி. கு மடம்
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரை யார் புரிவது?

இன்றைய வாழ்வில் சிக்கலான ஒரு கேள்வி இது. யாருக்கு யார் விட்டுக் கொடுப்பது? யாரை யார் அன்பு செய்வது? யாருக்கு யார் வழிகாட்டுவது? இப்படியே கேள்விக்கணைகளை தொடுத்துக் கொண்டே போகலாம். அவற்றுள் ஒன்று தான் யாரை யார் புரிந்து கொள்வது? இன்றைய இளைய சமூகத்தில் வாழும் இளைஞர்களை, பெற்றோரா? பெற்றோர் பெரியாரை இளைஞர்களா?

வாழ்வின் வசந்தத்திலே ஊஞ்சலாடிக் கொண்டிருப்பவர்கள் இளைஞர்கள். அவர்கள் மகிழ்வின் மன்னர்கள்! புதுமைவிரும்பிகள்! பாடும் வானம் பாடிகள்! புதுமையைப் புகுத்த விளைவார்கள் பழமையைக்களைய முனைவார்கள். உலகைமாற்ற தங்களையே மாற்றவல்லவர்கள் இளைஞர்கள். எனவே அவர்களின் இந்த ஆவலாசைகள் நிறைவேற எது இடையூறாக இருந்தாலும் அதை விரும்ப மாட்டார்கள். தமது கருத்துக்களைக் கூறி அதற்கான காரணங்களையும் விளக்கங்களையும் கொடுப்பார்கள். இவ்வேளையில் தான் பெற்றோர்கள் அவதானமும் நிதானமும் கொள்ள வேண்டும். அவர்கள் தம் பிள்ளைகளை அவர்களின் அபிலாசைகளை அதுவும் வாலிப வயதில் உள்ள பிள்ளையின் தேவைகளை கேட்கப் பின்னிற்கவோ அல்லது தள்ளி விடவோ கூடாது. பிள்ளைகள் தாம் கூறியதை எப்படியாவது செய்து முடிக்க முனைவார்கள். முடிவுகள் எப்படி இருந்தாலும் அவர்கள் அதை ஏற்பார்கள். ஆனால் பெற்றோர்கள் எதிர்கால வாழ்வை வருங்கால அமைப்பை எதிர்பார்த்தே ஒவ்வொன்றையும் செய்வார்கள். எவ்விடயத்திலும் பிள்ளையின் நன்மையே அவர்களின் முதன்மை. எதையும் தாங்குபவர்களுக்கு எதையும் செய்யும் சுபாவம் உண்டு. எனவே பெற்றோர் இளைஞர்களை நிதானமாக நடாத்திச் செல்ல வேண்டும். நன்மைதரும் அறிவுரைகளை அன்புடன் கூறவேண்டும் அதை அவர்கள் ஏற்காது விட்டால் அவர்கள் விரும்புவதைக் கேட்கவேண்டும் அது பெற்றோருக்கு பிடிக்கவில்லையானால் மறுப்புத் தெரிவிக்காது சிறுசிறுமாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். எனவே பெற்றோரே பிள்ளைகளை இனம்கண்டு புரிய வேண்டும்.

D. E. ரட்ணராஜ்
இளவாலை

## மனித உறவு

வாழ்க்கை என்பது; உறவுகளால் அமைந்த சங்கிலித் தொடர்! உறவு எனும் மென்மை மலர்கள் பலவற்றால் தொடுக்கப்பட்ட ஒரு பூமாலை! வாழ்க்கையில் உறவுகளுக்கு மிகப் பெரும் இடமுண்டு. எந்த மனிதனாலும் தனித்து வாழ முடியாது. ஏனெனில்; ''மனிதன் ஒரு சமூக விலங்கு'' (Man is a social animal) தனிமையிலே இன்பம் காணும் துறவியும் ஏகாந்த அமைதியிலே தவம் செய்முனிவரும் தனிமையானவர்கள் அல்லர். முற்றும் துறந்த முனிவனும் உறவு கொள்ளவே விழைகின்றான். இயற்கையுடன் தன்னை ஒன்றித்திட முனைகின்றான்.

அதன் நிறைவாகப் பேரின்பம் துய்க்கின்றான் எனின் உறவுகளின் கொடுமுடியே பேரின்பம் என்க பேரின்பம், உறவுபாலுள்ள கவர்ச்சியிலே தொடங்கி ஆழ்ந்த விருப்பமுற்றுப் பின் மெய்மறந்த நிலையை அடைந்து இன்பத்தில் நிறைவுறுகின்றது. இயற்கையோடும் இறைவனோடும் தன்னை ஒன்றித்து விட்ட துறவி உலகை மறந்து சுற்றுப்புறங்களை மறந்து பேரின்பம் எய்துகின்றான். உறவற்ற வாழ்க்கை மழையற்ற பாலை வனத்திற்குச்சமம். எனவே மனித உறவை மாற்றிவைத்து விட்டு ஒருவன் மனித வாழ்க்கை வாழ முடியாது.

செ. றெபின்சன் ஜோ
புனித. மாட்டீனர் குருமடம்
யாழ்ப்பாணம்

## நீ...

இருளை நீக்கி
ஒளியினைக் காட்டுவாய்
அகந்தையை அழித்து
அன்பை ஊட்டுவாய்
இடுக்கனைக் களைந்து
இன்பத்தை பெருக்குவாய்
சோம்பலை அடக்கி
துணிவை ஓங்கச்செய்வாய்
தாழ்வை தடுத்து
உயர்வை ஏற்றிடுவாய்
தோல்வியைக் கொண்டு
வெற்றியை அடைவாய்
வன்சொல் அகற்றி
இன்சொல் போற்றிடுவாய்
வளமாய் நீ வாழ
வளர்க இவ்வழியில்!

வெ. யூஜின்
வாகரை

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
29-9-1989




அன்பு இளம் உள்ளங்களுக்கு

### சத்தியமே நித்தியம்

சத்தியமே
நித்தியமும் நிலைக்கவேண்டும்.
தரணியினிலே
தார்மீகம் தளைக்கவேண்டும்.
வாழ்க்கையினில்
வாய்மையே வளரவேண்டும்.
வார்த்தைகளை
வழுவாமல் காக்கவேண்டும்.
நேர்வழியில்
பாரினிலே பழகவேண்டும்.
உள்ளத்தினில்
உண்மையை உணர்த்த
வேண்டும்.
உத்தமராய் சத்தியத்தில் உயரவேண்டும்.
ஊழல்களை உறக்கமின்றி அழிக்கவேண்டும்.
உறவுதனில் உயிர்களையே மதிக்கவேண்டும்.
நித்தியராம் சத்தியனை வணங்கவேண்டும்.

அன்பு நெஞ்சன் வி. பி.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு—47

குருசுமுத்தண்ணை:- என்ன தம்பி வீட்டிலே ஒரே அலியலாய் இருக்கு, பிள்ளையள் நிண்டா இதிலதான் பொழுது போகுதோ. படிப்பை கவனிக்கிற மாதிரி இல்லப்போல கிடக்கு?

அடைக்கலம்:- ஓம் அண்ணை ஓம். பள்ளிக்கூடம் தொடங்கினத்தானே படிக்கிறதுக்கு.

குரு முத்:— அப்ப பள்ளிக்கூடத்துக்காகத்தான் படிப்பிக்கிறியே ஒழிய உங்கட பிள்ளையள் அறிவு வளர வேண்டும் எண்ட எண்ணம் உங்களுக்கும் இல்லை தானே?

அடைக்கலம்: ஏன் அண்ணை இல்லை. படிச்சா பரீட்சை வைக்கவேணும் அதில பாஸ் பண்ண வேணும். அப்ப எல்லோ முன்னேற்றம் வரும்.

குரு. முத். எடதம்பி பரீட்சை வைக்கவும், பள்ளிக்காகவும் உன்ர பிள்ளையளை படிக்கவைச்சா அதில மட்டும் அறிவு வளர்ந்திடாது பார். நாடு சீர் இல்லை எண்டு சொல்லுறதை விட வீடு சீர் இல்லை எண்டு தான் சொல்லவேணும். நீங்களே இப்பிடி சொன்னா சிறுசுகளும் அதுக்குத்தானே தாளம் போடும். பின்ன அறிவு என்ன வளருறது, அழிவுதான் வளருதுபார்.




### குடும்பம்

குடும்பம் என்ற குருவிக்கூட்டினிலே தந்தை, தாய், பிள்ளை போன்ற அழகிய குருவிகள் வாழ்கிறார்கள். இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்துதான் சமுதாயத்தை உருவாக்குகிறார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகள் பலதரப்பட்டவை.

தந்தையானவன், உழைத்து தன் மனைவியையும், பிள்ளைகளையும் காத்து, இறைவனுக்கு உகந்த முறையில் வாழ்க்கை நடாத்தி, மனைவியையும், பிள்ளைகளையும் நல்வழியில் ஒழுகச்செய்தல்வேண்டும். தாயானவள் தன் தெய்வமாகிய கணவனையே போற்றி, தன் செல்வங்களாகிய பிள்ளைகளைக் காத்து, தானும் அறநெறியில் வாழவேண்டும். பிள்ளைகள் தந்தை, தாய் சொற்கேட்டு தங்களுக்குரிய கடமைகளாகிய படித்தல், பெற்றோருக்கு உதவிசெய்தல். இறைவனோடு எந்நேரமும் இணைந்திருத்தலாகிய பல கடமைகளை நிறைவேற்றல் வேண்டும். இவ்வாறு இவர்களின் கடமைகளைப் பலவாறாகக் கூறலாம்.

குடும்பம் ஒரு கோயில் இக்கோவிலிலே பிதா, சுதன், தூய ஆவி குடியிருக்க வேண்டும் அப்போது தான் அது குடும்பமாகும் இ[illegible] கூறினால் திருக்குடும்பத்தின் திருவழி பின்பற்றல் வேண்டும். பல திருத்தொண்டாற்றலும் எம் தலைசிறந்த கடனாகும்.

தேவனும், தேவியும் பிள்ளைகளும், நேர்வழி சென்று, நல்வழிகண்டு இறைவழிதேடி, இறைபுகழ் பாடி ஒழுகுதல் வேண்டும் எம் குடும்பங்களும் இவ்வழிகளிலே செல்ல நாம் ஒவ்வொருவரும் ஒத்தாசைப்படும் போதுதான் அந்தக் குருவிக்கூட்டில் இன்பம் பிறக்கும். இறைவனும் வாசம் செய்வார்.

குழந்தை அன்புராஜ், முருங்கன்

### குடும்பச்சண்டைகளை நீக்குவோம்

தந்தை, தாய், பிள்ளை என்ற அங்கத்தவர்கள் ஒன்றிணையும் போது குடும்பம் என்ற அகல்விளக்கானது ஏற்றப்படுகின்றது. குடும்பங்களே அனைத்திற்கும் அடிப்படைக்களமாக இன்று காணப்படுகின்றன இதனால் குடும்பம் என்பது ஒருகுட்டித்திருச்சபை என்று பொருள் கொள்ளப்படுகின்றது ஆனால் இன்றைய குடும்பங்கள் நாளுக்கு நாள் குடும்பத்தன்மையை இழக்கின்றன. இதனால் குடும்பங்களிலே அன்பு இல்லை; அமைதி இல்லை; அகமகிழ்ச்சி இல்லை. மாறாக குறுகிய மனப்பான்மைகள் வளர்கின்றன. போட்டியுணர்வுகள் பொறாமையாக உருவெடுக்கின்றன. இதனால் தான் இன்று குடும்பச்சண்டைகள் சர்வசாதாரணமாக இடம் பெறுகின்றன.

இன்றைய குடும்பக்கண்ணோட்டத்தில் குடும்பத்துக்குள்ளேயும், குடும்பத்திற்கப்பாலும் குடும்பச் சண்டைகள் தீவிரமாகவளர்கின்றன. இதற்கு காரணம் என்ன? குடும்பங்களிலே புரிந்துணர்வு புதைந்துவிட்டது. விட்டுகொடுக்கும் மனப்பான்மை குறைந்துவிட்டது அன்பு மனப்பான்மை சிதைந்துவிட்டது. இதனால் சண்டைகள் ஏற்படுகின்றன.

குடும்பமட்டங்களிலே இன்று பலவித நெருக்கடிகள் காணப்படுகின்றன கணவன் ஒரு பாதை மனைவி ஒரு பாதை, பிள்ளை ஒரு பாதை என்று பிரிவதால், வாதைகள் ஏற்படுகின்றன. நாளாந்தம் நம் குடும்பங்களிலே எத்தனை சண்டைகள்? கணவன் மனைவியை உதைக்கிறான். பிள்ளைகள் பெற்றோர்களை எதிர்க்கின்றனர். இன்றைய பத்திரிகைகளில் வருகின்ற 'தற்கொலை சம்பவங்கள்' இத்தகைய குடும்பச்சண்டைகளின் விளைவுகளே ஆகும்.

குடும்பங்களில் ஏற்படும் குரோத உணர்வுகள், குடும்பங்களிடையே பரவுகின்றது இன்று சுயநலபோர்வைக்குள் ஒவ்வொருவரும் உறங்குகின்றனர் இதனால் தமக்கே அனைத்தும் என்று செயற்படுவதால் குடும்பங்களிடையே குரோதவுணர்வுகள் முளைவிடுகின்றன. இதனால் இத்தகைய குறைபாடுகளானவை விஸ்வரூபம் எடுப்பதால், சண்டைகள் ஏற்படுகின்றன. இன்று சமூகத்தில் ஒற்றுமை குறைந்துவிட்டது பெற்றோர் பிள்ளைகளின் உள்ளத்தில் சண்டைமனப்பான்மை உறைந்துவிட்டது.

எனவே ஒவ்வொரு குடும்பங்களும் குடும்பப்பண்புகளை அனுசரிக்க வேண்டும். திருக்குடும்பத்தை தம் கலங்கரை விளக்காக ஏற்று, அதைப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் அன்பு எம்மில் வளரும். இதனால் சண்டைகள் தளரும். மகிழ்ச்சிஎம்மில் குடிகொள்ளும். சமாதானம் எம்மத்தியில்பொங்கியெழும். இதன் மூலம் புதியதொரு சமூகத்தை நாம் படைக்கலாம் அல்லவா?

நிலான் சந்தாம்பிள்ளை, முருங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

## சிறிய இறைவாக்கினர்-34

**சக்கரியாஸ்-2.**

முதலாம் சக்கரியா ஒரு காட்சியாளர். காட்சி இலக்கிய வரலாற்றில் இவர் சிறப்பிடம் வகிக்கிருர் வார்த்தையைவிட காட்சியையே கருத்துகளை வெளிப்படுத்துவதற்குரிய சாதன மாக இந்த இறைவாக்கினர் கருதுவதாகத் தெரிகின்றது. இவரது மனப்போக்கிலும் மொழியிலும் ஓர் தனித்துவம் காணப்படுகின்றது.

உள்ளம் தளர்ந்த மக்களுக்கு அவர்களது மெசியா பற்றிய கனவுகளை இறைவன் உறுதியாக நிறைவேற்றுவார் என்று உறுதியளிக்கிருர். ஆகவே எதிர்காலம் பற்றிய கனவுகளை நயமிக்க காட்சி இலக்கிய நடையில் சக்கரியா எடுத்துக்கூறுகிருர் அதே வேளையில் வருங்காலம் பற்றி எண்ணிக்கொண்டு உடனடியாக மக்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களைக் கைவிடக்கூடாது என்றும் வலியுறுத்துகிருர். விதவைகளும், அநாதைகளும் வீடின்றி, உணவின்றி வாடும்போது உண்ணுநோன்பு எப்படிக் கடைப்பிடிக் வேண்டும் என்று விவாதித்துக் கொண்டிருப்பது முறையல்ல என்கிருர்..இரு வேறுபட்ட நடையில் ஆற்றலோடு பேசுகிருர்.

இறைவாக்கினர் சக்கரியா காட்சி இலக்கியத்தில் ஒரு கலைஞர். அதே சமயம் சீர்திருத்தம் செய்யும் இறைவாக்கினரும் ஆவார். ஒரே உரையில் இரண்டு தன்மையையும் இணைத்துக் கூறுகிருர்.

மேலும் எல்லாம் கடந்த இறைவன் நேர்மையுள்ளராக இருக்கின்ருர் என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறி மனத்துக்கம் கொள்ளும்படி சக்கரியா அழைப்பு விடுக்கின்ருர். அவர்களது மூதாதையர்கள் இறைவாக்கினர் இடைவிடாது வலியுறுத்தின எச்சரிக்கைகளைப் புறக்கணித்தனர். மனந்திரும்ப மறுத்தனர். அவர்களின் வழித்தோன்றல்களான நீங்களும் அந்த பிழையைச் செய்யக்கூடாது என அறிவுறுத்துகிருர். ஆலயத்தைத் திரும்ப கட்டுவதிலும், வழிபாட்டைத் திருப்ப அமைத்தலிலும் மட்டும் சக்கரியா கருத்துக்கொள்ளவில்லை. ஒழுக்கம், கீழ்படிதல், நேர்மையான வாழ்வு ஆகியவற்றை வலியுறுத்திப் போதித்தார்.

மக்கள் தூய்மையாக வாழ்வதையே இறைவன் எதிர் பார்க்கிருர் என்பதைக் காட்சிகளின் வழியாக எடுத்துக் காண்பிக்கிருர்.

—கி. சா. பங்கிராஸ்

**அறிந்துகொள்ளுங்கள் 90**

## பினேயஸ்

பாலாம் என்னும் குறி சொல்வோன் வாயிலாக இறைவன் இஸ்ராயேல் மக்களிடையே தோன்றவிருக்கும் மெசியா பற்றி இறைவாக்கை அறிவிக்கிருர். பாலாம் மோவாப் அரசனுக்கு ''இஸ்ராயேல் மக்களை யாவே வழி நடத்துகிருர் அவர்களை அழிக்க முடியாது'' என்று கூறுகிருர். எண் 31:16-ம் வசனத்தின்படி பாலாம் வேறு கோணத்தில் காட்டப்படுகிருர். இங்கு அவர் இஸ்ராயேல் மக்களை யாவேயிடம் பிரமாணிக்க மற்ற தன்மைக்கு இட்டுச் செல்பவராக காட்டப்படுகிறது. இஸ்ராயேல் மக்கள் யாவேயிடம் கொண்டுள்ள விசுவாச அடிப்படையைத் தாக்கினுல் ஒழிய அவர்களை யாரும் எதுவும் செய்ய முடியாது. எனவே அவர்களை பீல் பேகோர் வழிபாட்டுக்கு இழுக்கும்படி மோவாப் இனத்தவர்களுக்கு அறிவுரை கூறினுர். (எண் 31:16).

இஸ்ராயேல் மக்கள் மோவாப்பிய பெண்களோடு விபச்சாரம் செய்தனர். அவர்கள் மூலமாக பீல் பேகோரை ஆராதிக்க தொடங்கினர் (எண் 25: 1-3). அவ்வழிபாட்டில் வழங்கப்படும் குடியில் மதியிழந்தனர். இதனுல் யாவேக்கு கோபம் மூண்டது. அவர் மோயீசனிடம் '' இப்படிப்பட்ட இஸ்ராயேலரை தூக்கு மரத்தில் தூக்கு'' என்ருர். யாவேயில் பிரமாணிக்கமுள்ள இஸ்ராயேல் மக்கள் பிரமாணிக்கம் தவறிய மக்களின் நடத்தையைக் கண்டு சினந்தெழுந்தனர். அவர்களில் முதன்மையானவர் ஆரோனின் புதல்வன் எலெயஸாருடைய மகன் பினேயஸ் என்பவன்.

ஆசாரக்கூடாரத்தின் முன் மக்கள் எல்லோரும் அழுது கொண்டிருக்கையில் வேசியான மதியானிய பெண்வீட்டிற்குள் நுழைந்த ஒரு இஸ்ரயேலனையும், அப்பெண்ணையும் மறைவிடத்தில் குத்திக் கொன்ருர் பினேயஸ். (எண் 25:6-48). அவன் காட்டிய ஆர்வத்தைக் கண்ட இறைவன் தனது கோபத்தை தணித்துக் கொண்டார். அவர் தன் கடவுளுக்காக பக்தி வைராக்கியம் காண்பித்து இஸ்ராயேல் மக்களின் துரோகத்திற்கு பரிகாரம் செய்தமையால் அதற்குப் பரிசாக அவருக்கும் அவர் சந்ததிக்கும் நித்திய குருப்பட்டம் கிடைத்தது. (எண் 25:13 .

யாவேயின் கட்டளைப்படி மதியான் நாட்டின்மேல் இஸ்ராயேலர் போர் தொடுத்து அவர்களை வெட்டி வீழ்த்தினர். அதில் குறி சொல்லும் பாலாமும் இறந்தான். (எண் 31:[illegible])

இ. ம. ஜெயசிலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக அன்பர்களே!

''மனைவி அமைவதெல்லாம்-இறைவன் கொடுத்தவரம்'' என்ருர். இக்காலக் கவிஞர்! உண்மையும், அன்பும், புரிந்து கொள்ளும் மனப்பான்மையும் உடைய மனைவியைப் பெற்றவன் தன் வாழ்விலேயே பெரும் பேறுபெற்றவன் ஆவான். கவிஞர் அழகாகவும், அளவாகவும் கூறிய வார்த்தைக்கு திட்டமிட்டு தீர்வு கொடுக்கின்ருர் நம் திருநூல் ஆசிரியர்! எப்படி என்கின்றீர்களா?

18/22 இல் ''நல்ல மனைவியைக் கண்டுபிடிக்கிறவன் நன்மையைக் கண்டுபிடிக்கிருன்! அது கடவுள்கொடுத்த மகிழ்ச்சிக்குரிய கொடையாம்''! இது, வாசகர்கள் பலருடைய இதயத்தை தொட்டிருக்கும் என்பது எனக்கும் விளங்கும்.

இன்னென்றும் கூறுகிறேன். கோபிக்க மாட்டீர்களே.

''மனம்போல மாங்கல்யம்'' என்றும்,

''மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்'' என்றும்,

''பானை பிடித்தவள் பாக்கியசாலி'' என்று 3 வாக்கியங்களில் முற்றுண்மையைக் கூறுகிருர்கள் நம் முன்னேர்கள்!

திருமொழி நூல் சொல்லும் இன்னென்றையும் கவனிக்கின்றீர்களா? 18/23 இல்.

''ஏழை தாழ்ச்சியுடன் பேசுவான். செல்வமுடையோன் கடுமையாய்க் கத்துவான்.'' இது, இன்று எமது நாட்டிலே அன்ருடம் நடைபெறும் நிகழ்ச்சி என்பதை கண்ணுல் கண்டு வருகின்ருேம் தானே!

''ஆனுல் பணம் படைத்தவன் இடத்தில் அது ''பத்தும் செய்யும்- இன்னும் பலதும் பேசும்.'' என்பது எல்லோருக்கும் விளங்குகின்ற ஒன்றுதானே?

நேயர்களே! ''ஊருக்கு உதவுபவன் உலகிற்கு உதவாதவன்'' என்ற உண்மையை நீங்கள் அறிந்த ஒன்றுதானே.

இத்தகைய ரீதியில் இன்று நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நானும். நீங்களும் அன்ருடம் கண்ணோக்கிக் கொண்டிருக்கிருேம்.

''திருநூல் கூறும் பதிலடி'' 18/24 இல்.

''பலருக்குப் பிரியமுள்ள மனிதன் தன் சகோதரனைக் காட்டிலும் அதிகமாய் அவர்களால் நேசிக்கப்படுவான்''

கவிஞரின் கூற்று ஒன்று கேட்பீர்களா?

''சட்டம் ஏமாந்து போனுலும் போகும்- தர்மம் எப்போதும் பழிவாங்கியே தீரும்''

### வாரம் ஒரு சிந்தனை

''உன் உடல் சோர்ந்தால் பரவாயில்லை. உன் உள்ளம் சோராமல் பார்த்துக்கொள்''

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 3<br>சுடர்: 34 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### வழிகாட்டும் வார்த்தைகள்:

''ஆண்டவரே, வெட்கங்கெட்ட அக்கிரமிகளாகிய நாங்கள் இதோ உமது சமூகத்தில் நிற்கிறோம். நீர் எங்களை மன்னியாவிட்டால் நாங்கள் நாசமடைவோம் என்று எங்களுக்குத் தெரியும். சர்வ வல்லபரான பிதாவே, மன்னிப்புப் பெற நாங்கள் பாத்திரவான்களல்ல; என்ருலும் நாங்கள் கெஞ்சிக் கேட்கும் மன்னிப்பை எங்களுக்கு அளித்தருளும். இறைவா, பாவமானது உம்மை மனம் நோகச் செய்கிறது; தவத்தால் உமது கோபம் தணிகிறது. உம் மக்களின் மன்றாட்டுகளுக்கு இரங்கி, உமது கோபத்தை அகற்றுவீராக. உமது கோபத்துக்கு எங்கள் பாவங்களால் நாங்கள் பாத்திரராளேம். என்ருலும் எங்களை மன்னிப்பீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துநாதரது முகத்தைப் பார்த்து எங்களை மன்னியும் ஆமென்''

புனித அகுஸ்தினுரின் இந்த மனமுருகிய மன்ருட்டு, அவரின் உள்ளத்திலிருந்து எங்களுக்காக, இன்று நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்காகச் சொன்ன மன்ருட்டுக்கள் அல்லவா!

புனித அகுஸ்தினுர் பாவ வாழ்க்கை வாழ்ந்தபோது அவர் உள்ளத்தை உருக்கி, அவர் வாழ்வுக்கு வழிகாட்டிய புனித சின்னப்பரின் ''களியாட்டம், குடி, வெறி, காமம், ஒழுக்கம், கேடு. சண்டை, பொருமை இவற்றையெல்லாம் தவிர்த்து, ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள். வலுவற்ற உங்கள் இயல்பைப் பேணுபவர்களாய், தீய இச்சைகளுக்கு இடங் கொடாதீர்கள்'' (உரோ 13: 13, 14.) என்ற வார்த்தைகள் எமக்கும் வழிகாட்டியாகும். நல்வழி செல்வோம் நலம் பெறுவோம்.

அன்பு விழி

### அங்கத்துவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 207. | போ. அமிர்தராணி | ஆண்டு | 9 | இலகடிப்பிட்டி, றோ. க. த. க. பாடசாலை. |
| 208. | அ. ஹூசியா | ஆண்டு | 9 | இலகடிப்பிட்டி, றோ. க. த. க. பாடசாலை. |
| 209. | ஆ. அன்ரனற் சந்திரிக்கா | | 7 | திரு இருதயக் கல்லூரி, வதிரி. |
| 210. | அல்பேட் | ஆண்டு | 11 | அ. ம. தி. குரு மடம், கொழும்புத்துறை. |
| 211. | ல. ஜொய்ஸி | | 10 | ம. ம. வி. புங்குடுதீவு. |
| 212. | செ. இ. துஷ்யந்து | | 9 | நாவற்ட்டான் ம. வி. |
| 213. | க. மச்சேந்திரக்குமாரி | | 9 | ,, ,, |
| 114. | அ. மேரிரேஸ் | | 9 | ,, ,, |
| 215. | ம. மரிவுளா | | 8 | றோ. க. த. க. பா. தாளையடி. |
| 116. | ஆ. மேரி மஞ்சுரிக்கா | | 8 | திரு இருதய கல்லூரி வதிரி. |
| 217. | வி. புனிதராணி | | 9 | திருக்குடும்ப. க. ம. யாழ்ப்பாணம். |
| 218. | அ. ஜெ. செல்வருஜ் லெம்பேட் | | 8 | புனித ஆனள் ம.வி. வங்காலை. |

### அன்புள்ள தங்கைக்கு

அன்புத்தங்கை அறிந்திடுவாய்
பண்புடன் பகிர்வதைக் கேட்டிடுவாய்
கன்னல் மொழியே பேசிடுவாய்
கண்ணிய வாழ்வு வாழ்ந்திடுவாய்.

பறக்கும் பட்டம் வாங்காமல்
படித்தே பட்டங்கள் பெற்றிடுவாய்
சிறக்கும் திட்டங்கள் தீட்டிடுவாய்
சீராய் சிறப்பாய் வாழ்ந்திடுவாய்,

அயர்வுகள் உன்னை அணைத்திடினும்
அசந்தே நீயும் போகாதே
உயர்வுகள் தன்னைத் தழுவிடவே
உடனே முயற்சி செய்திடுவாய்.

நூல்கள் பலதை நுகர்ந்திடுவாய்
நுண்ணறிவாலே நிறைந்திடுவாய்
நிதமும் நீயே நிலம் போலே
நிகராம் பொறுமை தாங்கிடுவாய்.

வேதனை வருவது அற்பமென
வெந்தே மனதுள் துவளாமல்
சிந்தனை விழியை சுழலவிட்டு
சாதனை புரிந்திட துணிந்திடுவாய்.

சூ. யூஜின் பற்றிமா றஜனி
கௌரவ அங். A/8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புனித ஐந்துகாய பிரான்சீஸ் அசிசியார் பெருநாள்

யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கொண்டாடப்படும்

திரிதின ஆராதனை ஐப்பசி மாதம் 1ம், 2ம், 3ம் திகதி ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நிகழும்.

பி. ப. 4-45க்கு செபமாலை பி. ப. 5 மணிக்குத் திருப்பலி

திருநாட்தினம் ஐப்பசி 4-ஆந் திகதி புதன்கிழமை காலை 6-15 மணிக்கு திருநாட்திருப்பலி.

அருட்திரு J. P. E. செல்வராசா.
சபைச்கர்த்தா.

A/210

## அ. ம. தி. (O. M. I.) அழைத்தல்

அமலமரித்தியாக சபையில் சேர்ந்து குருவாகவோ அன்றேல் அமலமரிச் சகோதரனாகவோ பணிபுரிய விரும்புவோர் புனித வளனூர் குருமட அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

குருவாகவர விரும்புவோர் க. பொ. த. (சா.த) அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும்.

10ம் ஆண்டு மாணவர்களது விண்ணப்பங்களும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசித்தினம்: 27-10-89

அதிபர்
புனித வளனூர் (O. M. I) குருமடம்
கொழும்புத்துறை

A/213

## மடுத் திருவிழா - ஐப்பசி - 7

28-09-89 நவநாள் வழிபாடுகள்
தினமும் மாலை 6 மணிக்கு செபமாலையும் - மறையுரையும் நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெறும்.

7-10-89 காலை 6-30 மணி
திருநாள் திருப்பலி, மன்னார் ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக இடம் பெறும்.

பரிபாலகர்
மடுத்திருப்பதி

A/212

### 31-ம் நாள் நினைவு அஞ்சலி



திருமதி.
ஆரோக்கியம் செபமாலை

ஜனனம்: 09-03-1929 மரணம்: 04-09-1989

தாயே! நல்ல தாயாகவும்,
வழிகாட்டியாகவும்
நீங்கள் வாழ்ந்து
எம்மில் ஏற்றிய நேசதீபங்கள்
இன்றும் கனன்று
கொண்டிருக்கின்றன.
அந்த வேதனையோடு
உங்களுக்காக இறைவனை
வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 04-10-89 அன்று மானிப்பாய் தியான இல்லத்தில் காலை 6-15 க்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கணவன்' பிள்ளைகள்'
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

A/211

## ஓவியப் போட்டி 10.

### "செபமாலை அன்னையின் உருவம்"

இக்காட்சியை 30 C. M. × 25 C. M. ஓவியமாக வரைந்து 15-10-89இற்கு முன் "பாதுகாவலன்" அ. பெ. இல. 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள் உங்கள் சிந்தனை சக்தியையும், ஓவியத் திறனையும் வெளிப்படுத்தும் விதத்தில் இப்போட்டியில் பங்குபற்றுங்கள். அதிசிறந்த ஓவியம் பாதுகாவலன் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டு, பரிசுத் தொகையாக ரூபா 25/- உம் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

### ஓவியப்போட்டி 9இன் முடிவுகள்:

முதலாமிடம்:- அ. யூட் அல்வின் அகஸ்ரின்
சென். யேம்ஸ், இளவாலை.

இரண்டாமிடம்:- மரியாம்பிள்ளை சைமன்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

மூன்றாமிடம்:- மரியநாயகம் மரிவுளோ
றோ. க. த. க. பாடசாலை, தாளையடி.

### ஓவியப் போட்டி 9இல் பரிசு பெறும் ஓவியம்



"அரசியான புனித மரியாள்"

## ஊக்குவியுங்கள் வாசகர்களே!

பாதுகாவலன் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" நீங்கள் அறிமுகப் படுத்தாமல் எப்படி மற்றவர்கள் அறிய முடியும் மறை வட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வாரம் தவறாது பாதுகாவலன் வாசிக்கப் பழகிக்கொள்ள நீங்களே துணைபுரியவேண்டும்.

### 1ம் ஆண்டு இதயக் கண்ணீர் அஞ்சலி

ஆண்டவன் படைப்பு 25-08-1946 அநியாய அழிப்பு 10-10-1988

அருளானந்தம் அன்ரனி

ஆண்டொன்று ஆகுதப்பா
அடிமனமோ நோகுதப்பா
அன்பின் அப்பா! எங்களைத் தவிக்க
விட்டு எங்கு சென்றீர்கள்.
போகும்போது மீளமாட்டேன் என
ஒரு வார்த்தைதானும் சொன்னீர்
களோ அப்பா!
ஓராண்டு மட்டுமல்ல உவ்விடம் நாம்
வருமளவும்
ஆறாது கண்ணீர், அழுதழுது வாடுகின்
றோம்.


உமது ஆன்மா இறைவனில் சாந்திபெற நிதமும் எங்கள் பிரார்த்தனைகள்.

தங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி- மரியமலர்
அருமைப்புதல்வர்கள்- றெஜி,
றிச்சேட், றெச், றேஜர்
பெற்றார், சகோதரர்கள். மாமி,
மச்சான்மார், மச்சாள்மார்,
நண்பர்கள்.

புனித அந்தோனியார்
கோவிலடி, தாளையடி

A/195

### 15-வது ஆண்டு நினைவஞ்சலி



அன்ரனி ஞானமணி

தோற்றம்: 26-11 1923 மறைவு: 02-10-1974

நீ இல்லா உலகினிலே
ஆண்டுகள் மூ ஐந்து
வாழ்ந்து விட்டோம்!
வளர்ந்து விட்டோம்
இட்டுச் சென்ற
அடிச்சுவட்டில்
அமைகிறது நம் பாதை
காட்டிச் சென்ற
திசையினிலே
தொடர்கிறது நம் பயணம்
இருந்தாலும்!
நீ இல்லை! நிழல் இல்லை
நம் வழியில்
நின் நினைவுகள் நம் சொந்தம்
நம் நெஞ்சங்கள் என்றும்
உன் அரவணைப்பில்

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய 2 0-89 திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு போயிட்டி லூர்து மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

A/208

### 31ம் நாள் நினைவஞ்சலி



திருமதி எட்வீனம்மா அல்பேட்

மலர்வு 16-10 1946 உதிர்வு 31-08-1989

அன்புத் தெய்வமே
அருந்தவச் செல்வமே
பண்பின் இருப்பிடமே
பாசத்தின் பிறப்பிடமே
இறைவனின் சித்தப்படி
இன்றைய நாளினிலே
உனதான்மா சாந்தி பெற
உருக்கமுடன் வேண்டுகின்றோம்.

இவர்ன் ஆன்ம இளைப்பாற்றிக்காக 2-10-89 திங்கட்கிழமை காலை நாவாந்துறை புனித மரியன்னையின் ஆலயத்திலும், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் காலை 5-30 மணிக்கும், 1-10-89 ஞாயிறு வாரம் காலை 7-00 மணிக்கு கரம்பொன் - மெலிஞ்சிமுனை பரலோகராசா ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை அன்பு நெஞ்சங்கள் அனைத்திற்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன்- சூசை
அல்பேட் (சின்னராசா)
அருமைப் பிள்ளைகள்- அலறாட்
எட்வின், அன்ரனிட்,
வில்சன், கெமன்சன், தீபா
தாய், சகோதரர்கள், மைத்துனன்மார், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்.
"தந்தை இல்லம்"
கடற்கரை வீதி
நாவாந்துறை

A/214

### 50வது ஆண்டு நிறைவு

மல்லாகம்
யோண் தானியேல்

பிறப்பு 1880 இறப்பு 14-10-1939

மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தை ஆரம்பிக்க ஒத்துழைத்த யோண் தானியேல் இறந்த 50-வது ஆண்டு நிறைவு நாளிலே, அதே ஆலயத்தில் 14 ஒக்ரோபர் (சனி) காலை 6. 30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி இறைவனுக்கு நன்றிகூற அன்புடன் அழைக்கிறோம்.

பிள்ளைகளும், குடும்பத்தினரும்.
மல்லாகம்,

A/215

### செபமாலை

இருளின் வழியில்
ஒளி பரப்பும்
எழில் சோதி ன
மணிதீபம்
அருளின் வாய்க்கால்
ஆரமுதம்
அன்னை மரியாள்
செபமாலை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# பாகிஸ்தான் ஆயருக்கு பிரித்தானிய உயர்பதவி

பாகிஸ்தானிலுள்ள ராய் விந்த் மாவட்டத்தின் புரொட் டஸ்தாந்து ஆயராகிய ஆயர் மிக்கேல் நசீர் அலி லண்டனி லுள்ள திருச்சபை மறைபோ தக சங்கத்துக்கு பொதுச்செய லாளராக நியமிக்கப்பட்டுள் ளார், பிரிட்டனின் மிகப்பெ ரிய மறைபோதக சங்கமாகிய இதன் 190 ஆண்டு வரலாற் றில் பிரிட்டனுக்கு வெளியே உள்ள ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

1990இல் இப்பதவியை ஏற் கப்போகும் ஆயர் அலி தற் போது கான்டர்பரி பேராய ரின் ஆணைக்குழு ஒன்றின் செய லாளராக இருக்கின்றார்.

## பேராயருக்கெதிரான குற்றச்சாட்டு “ஆதாரமற்றது”

ஹைதரபாத் பேராயர் அரு ளப்பாவுக்கெதிராக கூறப் பட்ட குற்றச்சாட்டுகள் “ஆதாரமற்றவை” என ஹைதரபாத் கத்தோலிக்க சங் கத்தின் தலைவர் திரு பிலிப் தோச்சர் கூறியுள்ளார்.

இவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பேராயர் விற்ற தாகக் கூறப்படும் திருச்சபை ஆதனங்கள் இன்னும் நீதிமன் றத்தில் வழக்காடப்படுவதால் அவற்றை விற்பது சாத்திய மில்லை

பொய்குடாவிலுள்ள வயோ திபர் இல்லத்துக்குச் சொந்த மான காணிபற்றிப் பேசுகை யில் அது இன்னும் மறைமா வட்டத்தின் கையிலேயே இருப்பதாகவும் அதன் ஒரு பகுதி பெண்கள் விடுதி யொன்று அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் இவர் மேலும் தெரிவித்தார்.

# தென்கொரியாவில் ஞானஸ்நானங்கள் அதிகரிப்பு-ஆனால் விசுவாசக் குறைவு

கொரியாவிலுள்ள செயோல் மறைமாவட்டக் குருக்களின் ஞானஒடுக்கத்தின் பொழுது, அண்மைக்காலத்தில் ஞானஸ்நானங்கள் அதிகரித் திருந்த பொழுதும் விசுவாசம் வேரூன்றாத காரணத்தால் திருச்சபையிலிருந்து வெளியே றுவோர் தொகையும் அதிக மாகவேயிருக்கிறது என்ற தகவல் வெளியாகியது.

ஞானஸ்நானம் பெற்ற மக் களின் விசுவாசத்தை ஆழ மாக்க வேண்டியது அவசிய மாகையால் இதற்கான சில வழிவகைகளை அக்குருக்கள் எடுத்துக் கூறினர்கள்.

தென்கொரிய திருச்சபை பல பிரச்சினைகளை எதிர்நோக் குகின்றது. தொழில் நுட்ப முன்னேற்றம், இறக்குமதி செய்யப்பட்ட ஆபாசமான திரைப்படங்கள், புத்தகங்க ளும் மக்களின் ஒழுக்கத்தைச் சீர்குலைக்கின்றன.

இரு கொரியாக்களையும் இணைப்பதிலுள்ள அரசியல் பிரச்சினைகளும் வறியவர் தொகையில் அதிகரிப்பும் ஏனைய பிரச்சினைகளாகும்.

செயோல் மறைமாவட்டத் திலுள்ள 130 கத்தோலிக்க ஆலயங்களில் சுமார் 300 குருக்கள் பணிபுரிந்து வருகி றார்கள். கன்னியரும் பொது நிலையினரும் பங்கு மட்டத்தில் மறைக்கல்வியூட்டி வருகின்ற னர்.

வருடத்துக்கு மூன்று முறை ஞானஸ்நானச்சடங்கு நடை பெறுகின்றது. சிறிய ஆலயங்க ளில் சுமார் 50 குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் அளிக் கப்படுகிறது. பெரிய ஆலயங் களில் இத்தொகை 500 வரை இருக்கலாம்.

மரியாயின் சேனை போன்ற திருச்சபை இயக்கங்கள் இங்கு பணியாற்றி வருகின்றன. ஆனால் இவற்றின் செயற்பாடு கள் புனரமைக்கப்படவேண்டி யிருக்கின்றன.

## அ. ம. தி. சபையினரின் முன்னேற்றத்தினால் இலங்கைத் திருச்சபையில் ஏற்பட்ட வளர்ச்சி

(அ. ம. தி. உயர்தலைவருட னான பேட்டி இதழ் 34இன் தொடர்ச்சி)

கேள்வி; இங்குள்ள அ. ம. தியாகிகள் இவ்விலக் குகளை நோக்கி வாழ்ந்து முன் னேறுவதாக எண்ணுகிறீரா?

பதில்: ஆம். பல வேறுபட்ட மட்டங்களில் அத்தி சையில் செல்கிறார்கள். உ+ம் கிறிஸ்தவர்களைக் குறைவாகக் கொண்ட அநுராதபுரம், பதுளை, கண்டி போன்ற பகு திகளிற்குள் சென்றுள்ளனர் இவ்விடங்களில் வாழும் கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தைப் பாதுகாக்கவும் ஆதரவளிக்கவும், பௌத்தர்க ளுடனான கலந்துரையாடலை விரிவாக்கவும் அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது. மதங் களுக்கிடையேயான கலந்துரை யாடல், மனிதமுன்னேற்றம் நீதி போன்றவற்றை நோக்கி சில அடிகள் எடுக்கப்பட்டுள் ளன. இலங்கையின் மறை வட்டங்களில் பாதியில் செடெக்' போன்ற அபிவிருத்தி ஸ்தாபனங்களிற்கு எமது சபை யினரே பொறுப்பாக உள்ள னர். தென்பகுதியில் அருள்திரு. திசாபாலசூரியா வழிநடத்தும் சமூக, சமய ஆய்வு போன்றனவும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அருள்திரு. மைக்கல் ரொட்றிகோ போன்றோரின் வாழ்க்கை உரையாடலின் மூலம் பெற்ற அனுபவம் பெரிது. நீதிக்காக உழைத்த மையால் அவரைத் தொலைத்த னர். ஆனால் மக்களுடைய பதில் உற்சாகமளிக்கிறது. மறையுரைப்பணி மற்றைய தொன்று. எம்மிடம் இரு போதனைக்குழுக்களுண்டு. நாம் மிகவும் கருத்துள்ளவர்களாயி ருந்து புதிய அணுகுமுறைகளைப் பரீட்சிக்கவேண்டும். விவிலிய அப்போஸ்தலிக்கப் பணியைக் கட்டியெழுப்புதல் காத்திரமா னதாகத் தோன்றுகிறது. ஏனெனில் இன்றைய கிறிஸ்த வர்களுக்கு இது முக்கியமான தாயுள்ளது. அன்றேல் பிரிவினை வாதிகளுடன் அவர்கள் சேர்ந்துவிடுவார்கள். இலங் கையிலும் காத்திரமானதொரு பிரசன்னத்தைக் கொண்டுள் ளோம். புதிய முறைகளைத் தேடுகின்றோம். இதுவும் மறைப்பணியின் பரிமாணத் தின் ஒரு பகுதி.

கேள்வி: வெளிநாடுகளில் மறைப் பணியாற் றும் இலங்கை அ. ம. தியாகி கள் பற்றிய உமது அபிப்பிரா யம் என்ன?

பதில்; கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இலங்கைத் திருச்சபையின் புதுப்பந்தலில் அ.ம.தி. தியாகி கள் முக்கிய பங்களித்தனர். இன்று இங்கிருந்த அந்நிய நாட்டிற்கு அ. ம. தியாகிகள் பணிக்காகச் சென்று கொண் ருக்கிறார்கள். மலேஷியாவிற் குச் சென்றார்கள். பாகிஸ்தா னில் பணிபுரிகிறார்கள். அங்கு கத்தோலிக்கர் 1 வீதத்திலும் குறைவு அதனால் அங்கு சேவை அதிகம் தேவை. இந்தியாவின் சில பாகங்கள், பங்களாதேஷ், அபுதாபி, ஸ்கன்டிநேவியா, கனடாவின் தமிழர் அதிகம் வாழும் பகுதிகள் குறிப்பிடத் தக்கவை. பாரம்பரிய கிறிஸ் தவ நாடுகளின் செயற்பாட்டு வளர்ச்சியின் தோற்றமாகிய இம்மறைப்பணி இங்கிருந்தும் பிறநாடுகளில் ஆற்றப்படுவது அ. ம. தியாகிகளினதும் முக் கியமாக இலங்கைத் திருச்சபை யினதும் வளர்ச்சியினைத் துலாம்பரமாக வெளிக்காட் டுகிறது.

## கேரள வின்சென்ற் டி பவுல் சபையின் அறப்பணிகள்

சங்கனாச்சேரியிலுள்ள வின் சென்ற் டி பவுல் சபையில் 2601 அங்கத்தவர் உள்ளனர். இவர்கள் 214 பந்திகளைச் சேர்ந்தவர்கள். அங்கத்தவ ரிடமிருந்து ரூ 12, 15, 198 ம், ஆதரவாளர்களிடமிருந்து ரூ. 2,34, 540, ம் சேர்க்கப்பட்டுள் ளதாக சபையின் ஆண் டறிக்கை கூறுகின்றது. இதில் ரூ. 16, 12, 212 பல்வேறு அறப்பணிகளுக்காக செல விடப்பட்டுள்ளது. சபையிட மிருந்து வாராந்த உதவிபெறும் 937 குடும்பங்களுக்கு அளிக் கப்பட்ட தொகை ரூ. 3,28,726 ஆகும். கல்விச்செலவுக் காகவும், உடுபுடவைகளுக்காக வும் முறையே ரூ. 1,09 749ம், ரூ. 1, 79, 949 ம் செலவிடப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் வீடற்றோருக்காக 93 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன, வீட மைப்புத்திட்டம் ஆரம்பித்த கடந்த 12 ஆண்டுகளில் மொத்தம் 1674 வீடுகள் கட் டப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தச் செலவு ரூ. 46, 27, 919 ஆகும்.

இச்சபையின் கீழ் 34 பெண்கள் பந்திகளும், 34 இளைஞர் பந்திகளும் உள்ளன. பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த பேராயர் மார் ஜோசவ் பொவதில் “அன்புச் செயல்களை அலங்கரிப்பது பண்பு, கண்ணியம், பிறர்மட் டில் மரியாதை என்பனவாகும். எமக்குப் பிடிக்காததை பிற ரிடம் திணிக்கலாகாது” எனக் கூறினர்.

## பிதா றூட்டருக்கு மக்சைசே பரிசு

பிலிப்பைன் திருச்சபை தொடர்பு சாதன நிலையத்தின் இயக்குநரான பிதா ஜேம்ஸ் றூட்டர் 1989-ம் ஆண்டிற் கான மக்சைசே பரிசைப் பெறு கின்றார். இலக்கியம், தொடர்பு சாதனக் கலை ஆக்கங்களுக்காக இப்பரிசு அவருக்கு அளிக்கப் பட்டுள்ளது.

அவர் ஒரு சிறந்த எழுத்தா ளர், நாடகத் தயாரிப்பாளர், ஆசிரியர், அவர் தொலைக்காட் சிக்காக பல நாடகங்களை எழு தித் தயாரித்துள்ளார். ரேடியோ வெறிற்றூஸ் உட்பட பல கத்தோலிக்க ஒலிபரப்பு நிலையங்களை நிறுவத் துணை புரிந்துள்ளார். மார்க்கோஸ் ஆட்சியின் அநீதிகளை எதிர்த் துள்ளார். இளங்கலைஞர் களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கியுள்ளார்.

1958-ல் மக்சைசே பரிசுகள் ஏற்படுத்தப்பட்டபின்பு அவற் றைப் பெற்ற 145 பேரில் இவர் ஏழாவது குருவாவார்.

இவ்வாரம் 7875 பாது காவலன் பிரதிகள் அச்சி டப்படுகின்றன.

## திருத்தந்தையின் வருகையின் போது......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட சுமாத்திராவிலுள்ள பல்வேறு குழுக்களின் கலாச் சாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக திருப்பலி நடை பெறும் மேடையும், திருச் சடங்குகளும் அமைந்திருக்கும்.

2000 பேர் கொண்ட பாடகர் குழாமும், 250 பேர் கொண்ட நடனக்குழுக்களும் இதற்கென ஆயத்தம் செய்யப் படுவர். மேடான் மறைமா வட்ட திருவழிபாட்டுக்குழு திருத்தந்தை தம் கலாசாரத் திற்கமைய திருவுடை அணிய வேண்டுமெனக் கோரியுள்ளது. பொதுநிலைத் தலைவர்களுக்கும் மேடையின் அருகில் ஒரு விசேட இடம் ஒதுக்கவும் திட்டமிட்டுள்ளது. குருக்களின் பற்றாக்குறையினால் பொதுநிலை யினரே திருப்பலியில்லாத இடங்களில் வார்த்தை வழி பாட்டை நடத்துகின்றனர். இவ்வேளையில் நற்கருணை பகிர் தலிலும் அவர்களைப் பயன் படுத்திக் கொள்ளலாமென் றும், இது அவர்களைப் மகிழ் விக்கும் எனவும் கபூச்சின் குரு வான பிதா பென்ஜமின் பூர்பா கருதுகிறார்.

1985-ல் இந்தோநேஷியா வில் கிறிஸ்தவம் வேரூன்றிய 450-வது ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்டது.

அநேக புரொட்டஸ்தாந்து மக்களும் திருத்தந்தையின் வருகை வைபவத்தில் கலந்து கொள்ள ஆவலாயிருக்கின் றனர்.

## வீதி திருத்திய மாணவர்கள்

தேசிய சேவைத் தொண் டர்களும் புனித பேர்க்மன்ஸ் கல்லூரி மாணவர்களும் மேற் கொண்ட சிரமதானத்தால் அலெப்பே - சங்கனாச்சேரி வீதி திருத்தப்பட்டது. அதிக வாக னப் போக்குவரத்துள்ள இந்த வீதி அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பழுதாகி விட்டது. சங்கனாச்சேரிக்கும் கிடங்கரைக்குமிடையேயுள்ள 4 கிலோமீற்றர் வீதியை இக் குழுவினர் திருத்தியமைத்த னர். 75 பேர் கொண்ட இக் குழு அரச கூட்டுத்தாபனங் களின் ஒத்துழைப்புடன் ஆகஸ்ட் 2ம் திகதி காலை8மணி யிலிருந்து மாலை 3 மணிவரை வரை கடுமையாக உழைத்து இவ்வீதியைத் திருத்தினர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல: QD/ 1001/ 58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறேம் என்கிறார் / ஆண்டவர்